உ

குருவே துணை.

# கீர்த்தனைப்பாடல் திரட்டு

நூலாசிரியர் :

மகான் - வண்ணச்சரபம்

அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள்,

திருவாமாத்தூர்.

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் பொருளுதவிகொண்டு
பதித்து வெளியிடப்பெற்றது.

1971

Rs 2-

திருவாமாத்தூர்க் கௌமார சபை வெளியீடு 11ஆ.

உ
குருவே துணை.

# கீர்த்தனைப்பாடல் திரட்டு

நூலாசிரியர் :
மகான் - வண்ணச்சரபம்
திருப்புகழ்ச் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் எனவழங்கும்
**அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள்,**
திருவாமாத்தூர்.

இஃது
தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் பொருளுதவிகொண்டு
பதித்து,

சென்னை, தமிழ் வளர்ச்சி இயக்குநர்
திருவாளர். **முத்து - இராசாக்கண்ணனார், M. A., B. O. L.**
அவர்கள் தலைமையில்,

சென்னை, குமரகோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில்
நடைபெற்ற விழாவில்

சென்னை, இசைப் பேரறிஞர்
**தவத்திரு. திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகளால்**
வெளியிடப்பெற்றது.

3—10—71.

2.25
விலை ● காசுகள்

உ
குருவே துணை.

# முன்னுரை.

பண்ணார் தமிழ்த்தண்ட பாணியருள் கீர்த்தனைப்பா
தண்ணார் இசையின்பம் சார்ந்ததுவே—நண்ணார்வம்
கொண்டிசையாய்ப் பாடுநர்க்கும கூடுமன்பு செய்பவர்க்கும்
உண்டுமனத் தென்றும் உவப்பு.

கீர்த்தனைப்பாடல் திரட்டு என்ற இந்நூல் இசைத்தமிழ் வகையைச் சார்ந்ததாகும். பல்லவி (எடுப்பு), அநுபல்லவி (தொடுபபு), சரணம் (முடிப்பு) என்றவாறு முதலில் உள்ள பல்லவிக்கிசைய அநுபல்லவி, சரணங்கள் தொடர்புப் பொருளமையப் பாடுவது. இதில் இறைவன் புகழைப் பாடுதலும், வரலாறுகளைக் கூறுவதும் மரபு.

இம்முறையில் இராமாயண நாடகம், நந்தனார் வரலாறு, பெரிய புராணக் கீர்த்தனை, திருவிளையாடற் கீர்த்தனைகள்போன்றவை பல உள. பிற்காலத்தில் வாழ்ந்த நாடகமேதை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் பல நாடகங்களை உருவாக்கினர். கீர்த்தனைகள் இவற்றில் முதலிடம் பெறும். அடுக்குச்சொல், எதுகை, மோனைநயம் ஆதிய வற்றோடு அமையும் கீர்த்தனைப்பாடல்கள் செவிக்கின்பம் தருவன. இதில் ஓரடிக் கீர்த்தனை, பதம், நாமாவளி என்பன ஒருவகை. அரிச்சந்திர நாடகம்போல்வன பழமையும், சிறப்பும் உடையன வாகும்.

நாடகவகையில் வரும் கீர்த்தனைப்பாக்கள் அந்தந்த கதாபாத்திரங்கட்கேற்ப - நவரசங்கள் விரவப்பாவனையுடன் பாடி, இசைந்த, ராக, தாளங்களுடன் பக்கமேளக்கட்டுடன் நடிப்பதைக்கண்டு கேட்கும்போது உணர்ச்சிவயப்படாதவர் இருக்கமுடியாது, என்றோ நடந்த வரலாற்றினை அப்போது நடப்பதுபோலக் காட்டுவது நாடகத் தமிழியல்பு. நாடக நூல்கள் பல உண்டு. இன்றும் பல நாடக நூல்கள் வெளிவருகின்றன.

இறைவன் புகழாக இசைத்தமிழ்க் கீர்த்தனை பாடியவர்களில் தியாகராஜ சுவாமிகள், புரந்தரதாசர்போன்ற மேதைகள் பலராவர். அவர்களால் அன்று பாடப்பெற்ற பல கீர்த்தனைகளை இன்றும் கச்சேரிகளில் பாடக் கேட்டனுபவிக்கின்றோம். இவ்வரிசையில் வேதநாயகம் பிள்ளை இயற்றிய சமரசக் கீர்த்தனைகளும், மாம்பழக் கவிராயர் கீர்த்தனைகளும், முத்துத்தாண்டவர் கீர்த்தனைகளும் நம் தமிழ்நாட்டுச் சிறப்புடன் விளங்குகின்றன. இவையேயன்றி வட

நாட்டிலும் மீரா போன்ற இசைச்செல்வர்கள் வாழ்ந்தனர். அவர்களும் இசைப்பாடல் பாடியும், இறைவனருளில் ஒன்றியும் வாழ்ந்தனர். வெறும் இசையிலேயே உயிரினங்கள் வயப்படுகின்றன வென்ருல், அன்புடன் மனம்கசிந்து பாடும் இசையில் இறைவன் வசப்படுவான் என்பதில் வியப்பென்ன? ஏன்? இறைவனே வீணை வைத்து வாசிப்பதாக நூல்கள் கூறுகின்றன அன்ருே.

அகப்பொருட்டுறையிலும் பலகீர்த்தனை நம்நாட்டிலுண்டு. வெறும் இன்பத்துறையில் உள்ளனவும், ஆண்டான் அடிமைக்குள்ள ஈடுபாடுகளை உள்ளுறையாகக்கொண்டு புறத்தே இன்பத் துறையாகவுள்ளன்வும் பல. பல்லவிக்கேற்றபடி சரணங்களைப் பலவாக அமைப்பது பாடுநரின் புலமையை விளக்குவதாம்.

கீர்த்தனைப்பாடல் திரட்டு என்ற இந்நூலினை இயற்றிய ஆசிரியர் மகான் வண்ணச்சரபம் அருள்மிகு. தண்டபாணி சுவாமிகளாவர். இவர் இந்நூல் மட்டுமல்லாமல் முசுகுந்த நாடகமொன்றையும் இயற்றியுள்ளார்கள். இந்நூற் பாடல்கள், தன் அனுபவத்திற்கண்ட நிகழ்ச்சிகளை மையமாக வைத்துப் பாடப்பெற்றவையாகும். சுவாமிகள் முத்தமிழ்ப்பாமாலை என்றதோர் அரிய நூலை அருளியபோது நாடகம் என்ற பகுதிக்கென, பத்துக் கீர்த்தனைகளை அழகுறப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. இயல், இசை, நாடகம் என்ற மூவகைத் தமிழிலும் பாடல்கள் பல இயற்றியதோடன்றி இசையுடன் பாடவும் கூடியவர்கள் என்பது அறிந்து மகிழத்தக்க செய்தியாகும். இந்நூலிலுள்ள பல பாடல்கட்கு இராக, தாள வகைகளை அமைத்தனர். சில பாடல் கட்குத் தற்போது சேர்க்கப்பட்டது. சந்தக்கவிகளும், வண்ணக் கவிகளும் இராக, தாள அமைப்புடன் கூடியதேயாம். ஓரடிக் கீர்த்தனை, மேலே பல்லவி, அநுபல்லவிகள் வருவதன்றி உள்ளேயும் பல்லவி எடுப்புடன் அமைந்து நீண்டிருக்கும். இம்முறையில் சில கீர்த்தனைகள் இதில் உள்ளன.

இந்நூலைப் பாடியருளிய மகான் வண்ணச்சரபம் அருள்மிகு. தணடபாணி சுவாமிகள், இளமைப்பருவ முதலாகவே ஆறெழுத்துச் செபம், வேல் வழிபாடு இவையோடு தியானமியற்றியதன் பயனுகவும், முன்னைய தவத்தொடர்பாகவும் புதிய கவிகள் பல இயற்றலானுர்கள். முருகப்பெருமான் திருவருட்செல்வராக விளங்கிய இச்சுவாமிகளிடம் பல மாணவர்களிருந்தனர். அவர்களிற் பலர் புலமையில் வல்லவராகவும், உபாசனைச் சீலராகவும் விளங்கினர். அவர்களில் நாடகமேதை தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகளும் ஒருவராவர். இவரைப்பற்றி வியந்து சிறப்புக்கவியும் கூறிப் பாராட்டினர் தணடபாணி சுவாமிகள். அப்பாடலாவது,

என்னன்புக் கேற்ருேன்; இசைநாட கப்புலமை
துன்னறிஞன் சங்கதா சுப்புலவன்—நன்னயமார்
பண்பாளன், எங்கோன் பதம்பரவும் அன்புடையோன்
வணபா வலர்கண் மணி

என்பதாகும். இத்தகைய சிறப்புக்குரிய சுவாமிகளால் இயற்றப்பட்ட

நூல் மிகப்பல. அவைகளுள் முருகனருளியவாறு பாடப்பெற்றதாகிய முசுகுந்த நாடகம் என்றதோர் நன்னூலை தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் பொருளுதவிகொண்டு 1968 செப்டம்பர் 6, 7, 8-ல் பதித்து, தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் திருவுருவச்சிலை திறப்பு விழா மதுரையில் நிகழ்ந்தநூன்று வெளியிடப்பட்டது. தற்போது தனிக் கீர்த்தனைகளாகப் பாடப்பெற்று ஏட்டுச்சுவடியிலேயிருந்து வெளியிடப்பெருமலிருந்தவைகளை மேற்படி தமிழ்நாடு சங்கீத நாடகத்தின் பொருளுதவிகொண்டு பதித்து 3—10—71 ஆகிய இன்று தவத்திரு. திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் ஆதரவிலும், சென்னை தமிழ்மொழி இயக்குநர் திரு. முத்து இராசாக்கண்ணனூர் M.A .B.O.L. அவர்கள் தலைமையிலும், குமரகோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெறும் விழாவில் தவத்திரு. வாரியார் சுவாமிகள் அவர்களால் வெளியிடப்பெறுகிறது.

இந்நூலின் அருமையுணர்ந்து போற்றிப் படிப்பவர்கட்கும், பதித்து வெளியிட நிதி உதவி வழங்கிய தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தினருக்கும், விழாவை அமைத்துக்கொடுத்து ஆதரவுகாட்டி வெளியிட்டு பேருரை வழங்கிய தவத்திரு. கிருபானந்தவாரியார் சுவாமிகட்கும், நூல் வெளியீட்டு விழாவை நடத்திக்கொடுத்தமுகத்தான் பலவகையிலும் உதவிசெய்த குமரகோட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தெய்வநிலைய அறங்காவலர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல முருகப்பெருமான் அருளும், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளும் உண்டாவதாக என வாழ்த்தி வணங்குகிறேன்.

### கட்டளைக் கலித்துறை.

இமிழ்நீர்த் தடங்கடற் சென்னைப் பதியில் இசைந்திலங்கும்
தமிழ்நாடு நாடக சங்கீத நற்சங்கம் சார்ந்தவரும்
அமிழ்தே நிகர்தமிழ்த் தண்டபாணிப்பரன் ஆன்றஅன்பில்
அமிழ்வோ ரனைவரும் வாழ்கபல் மேன்மை அமைந்திடவே.

கௌமார மடாலயம்,
திருவாமாத்தூர் P. O.
விழுப்புரம் வழி.


இங்ஙனம்,
நூலாசிரிய சுவாமிகள் பெயரர்,
**தி. செ. முருகதாச ஐயா.**

இந்நூல் கிடைக்குமிடம் :

தலைவர்,
கௌமார மடாலயம்,
திருவாமாத்தூர் அஞ்சல்,
(வழி) விழுப்புரம்.

# உள்ளுறை.


1. கெம்பீர விநாயகரே
2. எந்தவிதத்திலேனும்
3. ஏன்காணும் இத்தனை
4. எக்கணம் தருவாயோ
5. சிவ சிவ சிவ சிவ
6. எப்படிச் செய்தாலும்
7. ஒரு சித்தன்
8. தெய்வமே
9. ஐயையோவுன்னை
10. கொன்று போடாதே
11. காமன் கணை
12. இந்த அநியாயத்தை
12. ஐப்பசி மாதத்தில்
14. இங்கிலீசுக்காரர்
15. ஏனுன் அழைத்தும்
16. இன்னமும் இரங்க
17. வினையாகிலும்
18. இந்தமோடி
19. இந்தப்படிக்கு நீ
20. இப்படிச் சோதிக்க
21. சத்துருசங்காரத்
22. என்றைக்குத்
23. நினைக்க நினைக்க
24. தெரிசனை செயலாமே
25. சேவித்த சம்பளம்
26. இன்னமும்
27, காப்பாற்றவேணும்
28. தில்லைத் திருநகரிக்
29. பாறைக்கிணறு
30. கனவிலாண்டபடி
31. மழை பெய்ய
32. மலரணைமேல்
33. நாமாவளி
34. மங்களம்



திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள் வழங்கிய

# அணிந்துரை.

நமது தேசத்தை அலங்கரிக்கின்றவர்கள் மூவர்கள். கற்புடைய மாதர்கள்; பக்தர்கள்; தத்துவ ஞானிகள்.

"பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்" என்கிறார் திருமூல நாயனார்.

மணிமுடியாகத் திகழ்பவர்கள் தத்துவ ஞானிகள். தத்துவ ஞானிகளில் சிலர்தான் உலகம் உவப்ப பலப்பல உத்தமப் பாடல்களை அருளிச்செய்தார்கள். இத்தகைய ஒரு சிலருள் தலை சிறந்தவர்.

**வண்ணச்சரபம் திருவாமாத்தூர் முருகதாச சுவாமிகள் என்னும் தண்டபாணி சுவாமிகள்** ஆவர். இந்த மகான் முருகப் பெருமானுடைய திருவருளால் பல்லாயிரம் பாடல்களைப் பாடியருளினார்கள்.

இயல், இசை மிளிரக் கீர்த்தனையாகவும், இறைவனுடைய கீர்த்திகளை ஆர்த்தியுடன் பாடியருளினார்கள். அது இப்போது அச்சிட்டு வெளிவருகிறது. இந்த அமுதமயமான கீர்த்தனைகளைச் சிறப்பாக இன்னிசை யரங்குகளிலே பாடி மக்கள் மனம் மகிழச் செய்வது அவசியம்.

இதனை வெளியிடுகின்ற தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தினருக்கு முருகன் கருணையால் இகபர நலன்கள் எய்துவதாக.

**வெண்பா.**

வாழி இயலிசைகள்; வாழி தமிழ்நாடு
ஏழிசையின் இன்பம் இனிதோங்க—ஊழிபல
வண்ணச் சரபம் மகிழ்தண்ட பாணிமகான்
வண்ணமுடன் வாழி மகிழ்ந்து.

அன்பன்,

24—9—71.

**கிருபானந்தவாரி.**

# பதிப்புப்பாயிரம்.

திருவாமாத்தூர், கௌமாரமடாலம்

புலவர் திரு. தி. மு. சங்கரலிங்கம் அவர்கள் இயற்றியது.

வண்ணச் சரபமெனும் மாணுர் திருப்புகழோன்
தண்ணற் றமிழ்முருக தாசகுரு—நண்ணவரு
தண்டபா ணிப்பெருமான் சாற்றுதமிழ் நூற்குழுவிற்
கொண்ட இதுசிறப்பா கும். 1

இயற்பாட் டினிலும் இசைநா டகப்பா
நயமாக யாரும் நவிலும்—பயன்மேவும்
என்ன வுணர்ந்தே இதனைச்சங் கீதசங்கம்
மன்னவச்சிட் டேதலுயர் மாண்பு. 2

நாடகச ங்கக்குழுவின் நன்மா னியமாகும்
பீடமைய மன்னும் பெருநிதியால்—நாடும்
முசுகுந்த நாடகத்தை முன்னமச்சிட் டேதல்
*விசுவ முணர்சிறப்பாம் மெய் 3

நாடகத்தி னேடியலாம் நற்றமிழி னுக்கிடையில்
நாட வருமிசையாம் நற்றமிழிற்—கூடிவரும்
கீர்த்தனையாம் இந்நூல் கிளர்முத் தமிழிலொன்ருய்
நேர்த்திபெற நிற்கும் நிலைத்து. 4

தெங்காரும் சோலைதிகழ் சென்னைத் தமிழ்நாடு
சங்கீத நாடகச ங்கக்குழுவின்—பங்காகும்
மானியத்தின் பேரால் வருமுதவி யாற்பதித்து
நானிலத்தோர் கொள்வரிந்த நாள். 5

சங்கீத நாடகச ங்கக்குழுவி னேர்வாழ்க
பொங்கார்வத் தோடிசைக்கும் புண்ணியத்தோர்—[சிங்கார
வேல னருளால் மிகுமுவப்பா யென்ஞான்றும்
ஞாலமிசை வாழ்க நயந்து. 6

---

* விசுவம்—உலகம்.

# வண்ணச்சரபம்
# அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள்
# வரலாற்றுச் சுருக்கம்

---

*தண்டபா ணிக்குருநா தன்வரலாற் றுச்சுருக்கம்*
*கண்டறிதல் அன்பர் கடன்.*

தேனினுமினிய செந்தமிழ் நாட்டின் ஒரு பகுதியான தென் பாண்டி நாட்டுத் திருநெல்வேலியில், சிறந்து விளங்கியவர், செந்தி ஞயகம்பிள்ளையென்பவர், சைவ மரபினரான அவர் இல்லறவாழ்வில் மூன்று மனைவியரை மணந்தும் மகப்பேறின்றி வருந்தினர். பின் நல்வாழ்வின் பயனுக நான்காவது மணமும் செய்தபின் அவரன்புக் குரிய காந்திமதியம்மையின் அருளால், ஆண்மகவைப் பெற்றனர். அந்த மகவே, தண்டபாணி சுவாமிகளாயினர். இவர் பிறந்தவுடன் பாலுண்ணல் முதலியனஇன்றி வாளா இருந்தனர். பலரும் வருந்தி னர். அன்றிரவு செந்திஞயகர் கனவில் இறைவன்ருேன்றி திரு வெண்ணீறும் நீலச் செவந்தி மலரும் கொடுத்தனர். அவை, விழித்த பின்பு கையிலிருக்கக் கண்டனர் தந்தையார். அப்போது கூறிய அருள்மொழிப்படி சங்கரலிங்கமென்று பெயரிட்டனர், திருநீறணிந்த னர். வழக்கபபடி குழந்தை வளர்ந்தது. பிள்ளைச்சடங்குகள் முறையே நடைபெற்றன. கலி 4941-வதான விகாரி வருடம் கார்த் திகைமீ அத்த நட்சத்திரம் (28—11—1839) தோற்றியகாலம்,

ஐந்தாண்டுப் பருவத்திற் கல்வி கற்கலானுர், எளிதிற் கற்றனர். தந்தையார் ஆருவது வயதிற் காலமானுர். தந்தையின் அதிநண்ப ரான சீதாராம நாய்க்கர் மாந்திரீக முறையில் வாழ்பவர். இத்தகைய நிலையறிந்து விநாயக மந்திரம், இல்க்குமி மந்திரம் கூறி, வழிபடும் முறையையும் உபதேசித்தார். அம்முறைப்படி பயின்று பலன் கண்டனர். அடுத்து ஆறெழுத்து மந்திரமும் ஓதினர். பின் இத னையே செபித்தல், வேலாயுத பூசைசெய்தல் இவற்றைக் கருத்துடன் செய்தனர். தாயின் தமக்கை வாழ்கின்ற சுரண்டைப்பதியில் கற்கும் படி விடுத்தனர். அங்கிருக்கும்போது அவ்வூரினர் பூமிகாத்தாள் என்ற பெயருடைய ஓர் அம்மனுக்கு விழாச்செய்தனர். சிறுவர் பல ருடன் இவரும் சென்றனர். இருந்த சிலரிடம் இவ்வம்மையின் பெயர்க் காரணம் கேட்டனர், கூற அறிந்திலர். ஒவ்வொருவிதமாகப் பேசினர். இவருக்குத் திருவருளின் தூண்டுதல் காரணமாகப் புதுப் பாடல் எழுந்தது.

அந்தப் பாடலில், முன்னர் தேவர்கள் திருப்பாற்கடலில் அமு தம் கடைந்தபோது விடம் நெருப்புப்போல் வந்தது. பலரும் அஞ்சி

ஓடினர். தீவண்ணரான சிவபிரான் அமுதமாக உண்டனர். அருகிலிருந்த உமையவள், இதை உண்டதால் உலக காரணனான இறைவனுக்கு ஊறு நேருமானல் உலகத்தில் எவையும் அழிந்துவிடுமே என்றெண்ணி, அந்தநஞ்சு உள்ளே செல்லாதபடி இறைவன் கழுத்தைப் பிடித்தாள். விடம் அங்கேயே நின்றது. எனவே அது உலக நலம் கருதிக் கருணையால் செய்தவள் அன்னை. ஆகவே பூமி காத்தாள் எனப்பெயராயிற்று என்ற கருத்துக்கொண்டது அவ்வெண்பா. பாடலில் வெண்பாப் புலிபோல்வது என்பது மரபு. அது எளிதில் முதற்பாட்டாயிற்று. அகரத்தை முதலாகக்கொண்டு, அமுதமென்ற மங்கலச்சொல்லால் தொடக்கமாயிற்று, பின்வரும் அமுத ஊற்றான கவிகளைப் பாடுவதைக்காட்டும் குறிப்பிலமைந்தது. கவியைக் காண்க.

" அமுதம் சுடையும்நாள் ஆலம் வெடித்துத்
திமுதமெனத் தீயெறித்துச் சென்ற(து)—அமுதமெனத்
தீக்கடவுள் உண்டார் திருக்கண்டத் தைப்பிடித்துக்
காத்ததனாற் பூமிகாத் தாள் " என்பது பாடல்.

அதுமுதல் பனையோலையேட்டில் எழுத்தாணிகொண்டு பழைய பாடம்போல, வரிகோணமல் தனித்தனி அக்கரமாகப் பிழையின்றி, ஒற்றெழுத்துக்கட்கு மேலேபுள்ளியிடல். ரகரத்துக்குக் கீழேகோடிடல் இன்றி விரைவாக எழுதும் ஆற்றல் பெற்றனர். இலக்கத்துக்கும் மேற்படவே இருக்கின்றன பாடல்கள். இடையிடையே முருகன்மீது வரும் ஊடல் காரணமாகப் பல ஏடுகளைக் கடல், ஆறு, தீ இவற்றில் இட்டழித்தனர். இப்போது உள்ளவை 50000 பாடல்வரையாகும்.

இவர் பாட எண்ணுவதொன்றானல், எழுதிமுடிந்தபின் வேறு புதிய கருத்தாமையும். 'என்மனதில் ஒன்றெண்ண, என் கை மற்றொரு வண்ணம் எழுதிடுமியற்கை கண்டும்' எனவும், பாடல்வரும் வேகத்துக்கு எழுதமுடியாமல் மறைந்த கவிகள் பல எனவும், சுவாமிகளே கூறுகின்றனர்.

" திடமிஞ் சியசெங் கதிர்வேல் முருகோன்
இடமென் றொளிர்என் மனமாம் வெளியில்,
கடலின் திரையிற் கவிவந் தெழுதா(து)
உடனங் கழிவுற் றனபற் பலவே." என்பர்.

" முருகதாசரநுபூதி " நூலில்

"கடலினும் பொருநை நதியினும், நெல்லைக் காலினும், கழுகுமாமலைப்பால், தடமுடன் எழும்நாத் தழலினும் கிடக்கும் தமிழெலாம் தரப்பெற விழைத்தேன், குடவளை முழங்கி அலைதரக் கயல்பாய் குவளை நீர்த்திரைபடும் தாழை, மடலவிழ்ந்துயர்சீர்ச் செந்தில்வாழ் முருகா மயிலில் வந்தருள்புரி வாயே."

என்று அழிக்கப்பட்ட பாடலை மீட்டுத் தருக என்றும் வேண்டு கின்றார். அழிக்கப்பட்டவை எப்படி வரும் என்ற ஐயமேற்படுகிறது. அவிநாசியில் முதலையுண்ட பிள்ளையை, மூன்றாண்டு சென்றபின், வறண்ட குளத்தில் நீரும் முதலையும் அதன் வாயிலிருந்து 3 ஆண்டு வளர்ச்சியுடன் பிள்ளையும் வந்தது உண்மையல்லவா, திருவருட் சம்மதமிருப்பின் இது பெரிதல்ல, என்பது சுவாமிகள் கருத்து

ஒருசமயம் பதினெட்டாவது வயதில் திருமலையென்ற பாண்டி நாட்டு முருகன் மலைக்கோயிலில் சென்று தெரிசனம் கண்முன்பெறக் காட்டவேண்டும், இன்றேல் இங்கேயே உருண்டு உயிர்விடுவேன் என்று, தீரமுடன் வேண்டினர். காலநிலைக்கேற்பக் காட்சிதரவில்லை. எண்ணியபடி மலையின்மீதேறி சந்நிதிமுன் வணங்கியபடியே உருண் டனர். உடலில் சிறிதும் ஊனமின்றி வந்தனர். இடது தோளில் ஏற்பட்ட உரைசல் காரணமான புண்தீர, வள்ளிநாயகி இவர் மன வெளியில் நீறிட்டும் நெற்றியிலணிந்தும் ஆறச்செய்தனர், இவ் விவரம் இவரது வரலாறும் அநுபவமும் கலந்து இவராலேயே “ குரு பர தத்துவ ” நூலில் விவரமாயும் அழகாயும்;கூறப்பட்டிருப்பதை யறியலாம்.

வடதிசையில் தலைவைத்து மறவிசைக் கால்நீட்டி
உடலையந்தத் திருமலையின் உச்சியில் நின்றுருட்டிவிட்டேன்
விடலையிடும் தேங்காய்போல் வேறுபட்டுச் சிதருமல்
மடமடெனக் கொண்டங்கோர் மண்தரையில் விட்டதுவே,

திருமலைச்சருக்கம்.

“ அவள்தன் நீற்றுக்,

கோயிலவிழ்த் தொருமூன்று விரலாலள்ளிக் கொண்டுவந்தென் இடத்தோளிற் குளிரப்பூசி, வாயிலிட்டு நெற்றியிலும் தரித்தாள் ”

“காயந்தீர்ந்த சருக்கம்”

நீற்றுக்கோவில் – திருநீற்றுப்பை.

இந்தவாறு முருகப்பெருமானையே தன் வழிபடு கடவுளாக வழி பட்டமையால் முருகதாச சுவாமிகளென்றும், திருப்புகழ்க் கவிகள் புதிதாகப் பல பாடிய தன்மையால் திருப்புகழ்ச் சுவாமிகளென்றும், தண்டபாணி வடிவம்போல, லங்கோடு–கௌபீனம் முழுநீறு– கல்லாடையணிந்தது கண்டவர் தண்டபாணி சுவாமிகளென்றும், வண்ணக்கவி பல பாடியதால் ‘வண்ணச்சரபமென்றும்’ உலகர்கூறிப் பாராட்டினர். அதுமட்டுமல்ல, வண்ணக்கவிக்கே இதுவரையில்லாத இலக்கணம், ‘வண்ணத்தியல்பு’ என்றியற்றினர். ஐந்திலக்கணங்க ளோடு, அது கற்றதால் வரும் புலமைக்கு ஒருமுறையிருக்கவேண்டு மென்றெண்ணி புலமையிலக்கணம் ஒன்றைச் சேர்த்து, அறுவகை யிலக்கணம் ஒன்றியற்றினர். இதில் ஒரு சிறப்பு என்னெனில் தமிழ்.

மொழியின் அக்கரங்களின் வரிவடிவம் எழுதவேண்டிய புதுமையை யமைத்திருப்பது மிக இனிய சிறப்பு. இப்படிப்பல புது முறைகளைத் தன் நூற்களில் அமைத்துள்ளனர்;

மும்மணிக் கோவைபல, மாலைபல அந்தாதி
மூவகையபல இன்னவா
முதுநெறிப் பனுவல்பல, புதுநெறிப்பனுவல்பல
முத்தமிழ்ச் சுவை வழாமல்
இம்மணிற் புலவர்பலர் மகிழ்வுற மொழிந்துளேன்
இப்போதும் நுவலு கின்றேன்
இன்னமும் பகருவேன்.

என்பதால் இவரது தெய்வப்புலமையைக் காணலாம்.

சீவ கருணையை மேற்கொண்ட சுவாமிகள், வேள்வியிற் கொலை செய்தல், கோவில்களில் கொலைசெய்தல், உணவின்பொருட்டுக் கொல்லுதல் இவைகளை மக்களாவார் செய்வதும், ஊனுண்டலும் தவிர வேண்டித் தவமிருந்தனர். ஒருசமயம் பழனிப்பக்கமுள்ள துமிசம்பட்டியில் சந்நாசப்பன் என்ற பேய்க்கோயிலின்முன் ஆட்டைப் பலியிடமுனைந்த ஒருவனை அறவுரைகூறி நிறுத்தினர். தன் மகன் வயிற்றுநோய் தீரவேண்டிய கடமை. இது வேண்டியபடி அருள்புரிவதென்று கூறினன், வயிற்றுவலி தீர மருந்துகொடு, உயிரைக் கொல்லவிடேன் என்றனர். சரியென்றொப்பிப் பூசையைத் தொடங்கினன், வயிற்றுவலி வந்து பையன் துடித்தான். உடனே பலியிட முயன்றான். அதைக்கண்ட அடிகள் தன் பூசைத் திருநீறிட்டு பிரம்பால் தடவி ஒரு பாட்டும் கூறினர். வலி நின்றது. அந்த ஆட்டை அவ்வூர்ப் பெரியதனக்காரரிடம் ஒப்புவித்து கிடையிற் சேர்க்கவும், தானே இறந்தபின் மண்ணிற் புதைக்கவும் கூறிச் சென்றனர்.

அயிற்றலைவா ! தென்பழனி யப்பா ! இச் சேய்தன்
வயிற்றுவலி முற்றுமற மாற்றி—வெயிற்புழுப்போல்
ஏழைகள்வா டப்படுத்தும் இப்பேய் உயிர் குடித்திட்(டு)
ஊழைவென்றோர் உண்டென் றுணர்த்து. என்பதப் பாட்டு.

இப்படி கோலியனூர் மாரி, திருவொற்றியூர்க் காளி, இடும்பன், கறுப்பன் போன்ற சிறு தெய்வங்களை முன்னிலையாக்கி உயிர்ப்பலி கொள்ளவேண்டாமென்று கூறியுள்ளார்,

மல்லையர் என்பார்க்குக் கண் பார்வை பெறவும், கறுப்பவேற் கவுண்டர், தேவகோட்டை–சிதம்பரம் செட்டியார், சிவகுருநாத பிள்ளை, துரைசாமி ரெட்டியார் போன்றார்க்கு மகப்பேறு உண்டாகவும் திருவருளிடம் முறையிட்டு பாட்டிசைத்து அருளியுள்ளார்.

அழுக்காறுகொண்டு பகைத்து, கறுப்பன் முதலிய தேவதைகளை ஏவல்செய்து கொல்ல முயன்றனர் சிலர். தனது முருகக்கடவுள் உபாசனையின் முதிர்ச்சி, ஆறெழுத்துச் செப வலிமையால் அவை பயனற்றொழிந்தன. அன்பர்கள் வாயிலாகக் கிடைக்கும் பொருளைக் கொண்டு தனது வேலாயுதப்பூசை, அடியவர்க்கு அன்னமிடுதல் போன்ற வகையிலேயே செலவிட்டனர்,

கோடிகோடி யாய்மிகு மந்திரங்கள் செபித்தும்
குலவும்தமிழ்ப் பனுவல் பலவாகப் பாடியும்
தேடியபொரு ளெல்லாம் தருமத்திற் செலவிட்டும்
தெய்வம் ஒன்றேயென்னும் தெளிவும் பெற்றேன்!

எனவும்

அப்பொன் னனைத்தையும் நான்போற்றி வைத்தில்லேன்
அன்னமும் துகிலும் அளித்தழித் திட்டேன்.

எனவும் கூறியிருப்பது காண்க.

பொதுவாகச் சீவகருணை நெறியை மக்கள்பெறச்செய்யவேண்டும் என்ற பேரவாவினர். முதலிற் பசுக்களைக்கொன்றுண்டு வாழ்வதை நிறுத்துவதில் தீவிர நோக்குடையவர். இதற்காகத் திருவருளிடம் அருட்சித்தியை வேண்டினர். தானே அருள்பெற்று வாழ்வதை அறவே விரும்பினாரில்லை, பசுவதையை நிறுத்தாமல், பிறப்பிறப்பற்ற முத்தியை இறைவன் உதவினாலும் பெறமாட்டேன் என்ற தீரமான மனவலியுடையவர். இதைப் பல பாடலிற் கூறினர்.

கோவதைக்கும் பொல்லார் குடிகேடு காண்பதன்முன்
சாவதற்ற முத்திபதம் தந்தாலும்--மேவற்கு
இசையேன்காண் என்னையின்னும் ஈடழிக்க வேண்டாம்
திசைதேர் பழனியரசே.

சுத்த பூசை தோய்தரு மாயின்
பேயும் தெய்வமாம், பிணப்பலி யேற்கின்
தெய்வமும் பேயாம் எனுமிது திறமே. என்று கூறியுள்ளார்.

தெய்வம் சுத்த பூசையுடையது. பேய் பிணம் (உயிர்ப்பலி) ஏற்பது பெயரால் உயர்வன்று, செயலால் என்பது கருத்து இப்படிப்பல. மக்கள் சமுதாய முன்னேற்றத்திலும் பல கருத்துக்களை நூல்களிற் கூறினர். கட்டாய மணம் கூடாது விதவா விவாகம் தேவை என்பது போன்ற முன்னேற்ற வழியை இவர் வகுத்திருப்பது சிறப்பாகும்.

எழுபத்திரண்டு திருவருள்பெற்ற தமிழ்ப்புலவர் வரலாற்று நூலை, 3000கவிகளில் புலவர் புராணம் என இயற்றினர். இதில் ஒரு சிறப்பு என்னஎனில், திருத்தொண்டர் புராணத்தில் அறுபத்து

மூன்று திருத்தொண்டர்களையும், தொகையடியாராக ஒன்பதின்மரை யும் கூட்டி எழுபத்திரண்டு எண்ணமைந்திருப்பதுபோல, திருவருட் சித்தியுடன் கூடிய தமிழ்ப்புலவர்களைச் சேர்த்து எழுபத்திரண்டா யமைத்திருப்பது சிந்திக்கவுள்ளதாம். இதன் சிறப்புப்பாயிரத்தில் ஓரிடத்தில் கூறுவதரவது.

"பொதுப்பாயிரத்தைப் பேசிய மட்டடக்கி
வருசிறப்புப் பாயிரமென்றுன்னுகின்றேன், கவிதை
வந்தபின் பார்த்துவப்ப தென்றன் வழக்கம் உலகீரே"

என்கின்றனர். தான் சாட்சியளவில் நின்றெழுதலும், திரு வருள் தூண்டும் செய்திகளை எழுதுவதும் என்பது புலனாகிறது. இப்படிப் பல சான்றுகளுள்ளன. தன் கருத்திற்றோன்றுமவற்றை அப்படியே கூறுவது வழக்கம். அதுபற்றிய புகழ்வு, தாழ்வு தனக் கெனக் கொள்வதில்லை. இதனை

புகழ்ந்தாலும் புகழாது இகழ்ந்தாலும்
எனக்காகாது, எனையசைப்பாற்காமே என்பர்.

சென்னையில், புதுவையில் நூல்களியற்றி யரங்கேற்றிய சபை யில் அழுக்காறுகொண்ட புலவர் சிலர் வாதிட்டனர். திருவருளின் துணையிருப்பதால் தக்க பதில் கூறி வெற்றி பெற்றார். உயிர்களைக் கொல்வது, ஊனருந்துவது எவ்வகையிலும் கூடாதென்ற தீவிர நோக்குடையவர். இதில் ஒத்த கருத்தினரான வடலூரடிகளிடத் தில் நேரிற் கலந்த அநுபவமுடைய இவர், வள்ளலார் திருமேனி மறைவுற்றதறிந்து, மனம் நொந்தனர். பல பாடல்களிற் கூறி அவர் திரும்ப வருதல் வேண்டுமென்பதுபற்றிய கருத்தைக் கூறியுள்ளார்.

மநுநெறித் திருநூல்: திருக்குறட் கருத்தை விளக்கிப் பல நீதிகளை அதன் எண்ணுக்குச் சரியாயும், மேலும் கூறல் கூடா தென்று, மூன்றதிகாரம் குறைத்து 130 அதிகாரத்திற் கூறினர். வருக்கக்குறளில், தமிழில் மொழி முதலில் வராத அக்கரங்களை உயி ரெழுத்துடன் புணர்த்திக் கூறியிருப்பதும் புது முறையேயாம். ஒலியலந்தாதி, தமிழ்ப் பிரபந்தங்கள் 96-ல் இதுவரை எவருமே பாடாத நூல். 64 கலைச்சந்தப்பாக்கள். 30-ல் அந்தாதியாகப் பாடு வது. அப்படி இருநூல் சுவாமிகள் இயற்றினர்.

தமிழலங்காரம்: தமிழின் சிறப்பியல்புகளைத் தக்க வரலாற்று டன் பாடிய தெய்விக நூல், 100 கவி. வேலலங்காரம், மயிலலங்காரம், ஆறெழுத்தலங்காரம்போற்பல. திருவரங்கத்திரு ஆயிரம், பழனித் திருஆயிரம், தில்லைத்திருஆயிரம், தெய்வத்திருஆயிரம், ஏழாயிரப் பிரபந்தம், போல தொகை நூற்கள் பல. யமகம், திரிபு, ஏகபாதம், இதழகல் (நிரோட்டம்) இப்படி அந்தாதிகள் பல. சிலவற்றுக்குத்

தானே உரையும் எழுதியுள்ளனர். இப்படி பல வியத்தகு செயல்கள் இவர் வரலாற்றில் உண்டு. முற்றும் எழுத இது இடமில்லை. எனவே சிலவேயீண்டு கூறப்பட்டன. இவரிடம் உபதேசம்பெற்ற வர்கள்பல. புலமையிலக்கணம், வண்ண இலக்கணம் இயற்றினர். கற்ற புலவர் பெருஞ்செல்வர், அன்பர் பலர் தொடர்புடனிருந்தனர். தலங்கள்தோறும் சென்று ஆங்காங்குள்ள தெய்வத்தின்முன் பாடிய துதிப்பாடல் பல. சமய வேற்றுமையின்றி ஆறு சமயங்களையும் பொதுக்கடவுளையும் பாடிய சமரசாநுபவமுடையவர் சுவாமிகள். இறுதியில் விழுப்புரத்தை யடுத்த திருவாமாத்தூர்ச் சிவத்தலத்தில் இறையருளால் வந்து தங்கி எல்லைதாண்டா நியமத்துடன் பத் தாண்டுகள் தவமியற்றிச் 5—7—1898-ல் திருவருட்பேறெய்தினர்.

அங்கு தண்டபாணி திருவுருவம் நிறுவப்பெற்று வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஏட்டுச்சுவடி நூல்கள் அவர் மரபினரால் பாது காக்கப்பெற்று வருகின்றன. பல நூற்கள் பதிப்பாகவேண்டி யுள்ளன. திருவருட்டுணையும் அன்பர்கள் பொருளுதவியும் இன்றி யமையாதிருக்கின்றன.

வாழ்க திருவருள்.



நூலாசிரியர் :
மகான் – வண்ணச்சரபம்
அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள்.

உ
குருவே துணை.

திருவாமாத்தூர் – கௌமார மடாலயத்தில்
நூலாசிரியர், வண்ணச்சரபம், அருள்மிகு.
**தண்டபாணி சுவாமிகளால் நிறுவி, திருப்பெயர் சூட்டி, வழிபடப்பெற்ற**

# கெம்பீர விநாயகர் துதி.

## கீர்த்தனை 1

இராகம் : நாட்டை — தாளம் : ரூபகம்

### பல்லவி (எடுப்பு)

கெம்பீரவி நாயகரே ! என்சொல்
கேளும் கேளும் ஐயா ! (கெம்பீ)

### அநுபல்லவி (தொடுப்பு)

தம்பி ! என்று வேலனைக் கூட்டிட்டேன்
சஞ்சலம் தீர்த்திடச் சாற்றும்ஐயா ! மாதைக் (கெம்பீ)

### சரணம் (முடிப்பு)

மேரு மலைத்துண்டு தாருமென் றும்மிடம்
வேண்டிக்கொண் டேன்,வெகு நாளாயும் அப்படி
நீருத வாதிருக் கின்றீரே உம்மது
நெஞ்சிரங் காதது நீதிக்கொப் பாகுமோ ? (கெம்பீ)

அன்றைக் கொருவன் எனைக்கொல ஏவியும்
அப்படிச் செய்யாமல் ஆண்டுகொண்டீர் ! அதை
என்றைக் கும்இவ்வுல கஞ்சொலிப் போற்றுதற்(கு)
ஏற்றவினை யாட்டொன் றின்றுசெய் தால்நன்றும் (கெம்பீ)

ஆவதைத் துண்ணும் கொடியரை வெல்வதற்(கு)
ஆசைகொண் டேங்கும் அடியவர் தம்மனப்
பாவனை யாவும் பலித்திடக் கண்டிந்தப்
பார்மகள் இன்புறப் பண்ணிட வேண்டும்காண் ! (கெம்பீ)

அகவற் கவிஒன்றுமுன் சொன்னவட்(கு)
அப்பே றளித் திட்டது மெய்யெனில்
மிகவும் துதித் தேங்கும் என்றனைக்கை
விடலா குமோ விக்கினந் தீர்த்திடும் (கெம்பீ)

ஆனைமுகம் அங்குச பாசங் கோ(டு)
அணியும் கைகள் ஆதிய சீருன்னித்
தேனைநிக ராயதி ருப்புகழ்
செப்பும் என்னைத் தேற்றிய தும்பொய்யோ

கெம்பீரவி நாயகரே! என்சொல்
கேளும் கேளும் ஐயா!

## கீர்த்தனை 2

## திருவாமாத்தூர் ஸ்ரீ அபிராமேசுவரப்பெருமான்மீது பாடியது

இராகம்: கௌளை தாளம்: ஆதி

பல்லவி

எந்த விதத்திலேனும் எனக்குனதருட் செல்வம்
எய்திடச் செய்வீ ரே (எந்த)

அநுபல்லவி

கந்தமலர்க் குழல்முத் தாம்பிகை பாகத்திற்
காணும் அபிராமேசக் கண்ணுதல் மூர்த்தியே
சந்தக் கவியும் வேணமட்டுந் தொகுத்தணிவேன்
தந்திமுகன் மேலாணை, சண்முகன் மேலாணை (எந்த)

சரணம்

குதிரை வாங்கப்போன மந்திரி ஒருவனைக்
கூட்டத்துடன்போய்த் தடுத் தாளாக்கிக் கொண்டதும்,
சதிசெயும் சமண்மதத்து, ஒருபெருங் குரவனைச்
சைவ சமயாசாரியா கிடச் சேர்த்ததும்,
கதிவிலக்காகிய யாகஞ்செய்வோன் மகன்
கவிகளுக்காய் என்பைக் கன்னியாக்கியதும்,
சுதிபெறும் வேதத்தோர் பலர் இகழ்ந்தவனைத்
தோழன் என்று தூதுசொன்னதும் மெய்யானல் (எந்த)

பசுக்களும் பார்ப்பாரும் தவசிகளும் இந்நாளிற்
படுந்துயர் தவிர்த்தின்பம் பலவிதத் தடையவும்
நசுக்கு வார்த்தைபேசிப் பொருள் கவர்ந்தநியாயம்
நடத்திடும் அவர்எல்லாம் நாசமாய்ப் போகவும்
பொசுக்கும் மாமிசங்களும் தின்றுகொக் கரித்திடும்
பூரியர் யாவரும் பண்பட்டு மாயவும் (எந்த)

பாடிய படியெல்லாம் நடத்தியிவ் வுலகத்தோர்
பலரும்கண் டின்புறப் பண்ணிடும் கல்வியும்
தேடிவந் திரப்பவர் விருப்பங்கள் யாவையும்
தினந்தினங் கொடுத்திடும் சிறப்புற்ற செல்வமும்
வாடிநொந் துடல்விட்ட **வடலூரான்** முதலோர்கள்
வந்திந்த உலகத்தில் வாழச்செய் ஞானமும்
நாடிய படிபெறக் கருதியதற் குத்தக்க
நடத்தை யில்லாதிந்த நாடெங்கும் சுழல்கின்றேன் (எந்த)

அரக்கர் தானவரும் வேண்டிய பயன்பெற
அடல்விடையேறி வானகத்தில் வந்தருள் செய்தீர்!
இரக்கப்போய்க் கருமமே கருத்தா எனும் பெயர்க்(கு)
இனிய மாதர்களை யெல்லாம் ஈடழித்தீர்!
சுரக்கண முழுமையும் நாணஓர் குறுநகைத்
தோற்றத்தி னுற்புரஞ் சுட்டும் வெற் றியடைந்தீர்!
குரக்கு நெஞ்சினேன் என்னை மறந்தொரு
திருப்புகழ் கூறவும் செய்திட்டீர் கோபித்துக்கொள்ளாமல்

எந்த விதத்திலேனும் எனக்குனதருட் செல்வம்
எய்திடச் செய்வீ ரே.

இதுவும் அது

## கீர்த்தனை 3

இராகம்: எதுகுலகாம்போதி. தாளம் மி. சாபு.

பல்லவி

ஏன் காணும் இத்தனை வம்புசெய்கின்றீர் நீர்
இது நல்ல முறைதானோ. (ஏன்)

அநுபல்லவி

மான்காணும் இடக்கையீர்! மழுவைத்த வலக்கையீர்!
வயங்கும் திருவாமாத்தூர் வளர்அபி ராமேசரே! (ஏன்)

சரணம்

பல தலந்தோறும் போய்ப் பாடிடும் என்னைநும்
பதியைவிட்டகலாமற் பலவாறு தடைசெய்தும்
கலகமொன் றுண்டாக்கிக் கோயிற்குள் நுழையாமற்
கடக்க வைத்துப்பாடும் கவியும் வேண்டாம் என்றீர் (ஏன்)

ஒவ்வொரு பதிகமுன் பாடிய பேருக்கும்
உன்னிய பயனெல்லாம் உதவிய புகழ்பெற்றும்
திவ்விய கவிமூவா யிரம்பாடு வேன்என்று
தீட்சிக்கும் என்பேரில் தாட்சண்யம் இல்லார்போல் (ஏன்)

காமத்தி னுசையும் கடுந்தவத் தாசையும்
கலந்தூட்டும் தொழிலொன்றும் கற்றுச் செய்கின்றீரே
நேமித்த வரமெல்லாம் கொடுத்திடத் துணிவீரேல்
நீதிப் பிழை யானலும் நிறைபுக ழாகுமே (ஏன்)

அம்மைமுத் தாம்பிகை பாகத்தில் வாழ்வுறும்
அழகிய நாதரே ஆண்டநா யகரே
செம்மையார்ந்த பம்பை நதிக்கரைக் கோயிற்குள்
சிவலிங்கத் துள்வாழும் சித்தேசரே நித்தம்

ஏன் காணும் இத்தனை வம்புசெய்கின்றீர் நீர்
இது நல்ல முறைதானே.

## கீர்த்தனை 4 (பொது)

இராகம் : மலயமாருதம் தாளம் : ஆதி

பல்லவி

எக்கணந் தருவாயோ—நின் திருவருள்
எக்கணம் பெறுவேனே (எக்கணம்)

அநுபல்லவி

முக்கணன் முகுந்தனென் றிகலும் மதங்கடந்த
முதற்றெய்வமேகுரு மூர்த்தமா வருஞ்சேவை (எக்கணம்)

சரணம்

சாக்கிர சொற்பனம், சொற்பன சாக்கிரம்
சகச ஞானம் மனச்சாட்சியிற் றேற்றினை
நோக்கிடும் படிகண் முன்வந்திலே, ஆதலின்
நொந்து போனேன் அந்தோ சிந்தனைப் படிவரம் (எக்கணம்)

சைவ சமயத்துற்ற நால்வரும் வணிணவம்
த்னிலுற்ற பதின்மரும் சாற்றுமற்றைச் சமயத்(து)
ஐவரை வென்றவர் எவரும் அடைந்தபர
மானந்தத் தெய்வமே ஞானமும் சித்தியும் (எக்கணம்)

ஒவ்வொரு சமயத்திற் புகுந்து மற்றவைகளை
ஒருங்கிகழ்ந்தவருக்கும் உதவிய தெய்வமே
எவ்வகைச் சமயமும் உனதென் றுணர்ந்தஎன்னை
இகழ்ந்துவிட்டாலுனக் கிளப்பமன்றோ இன்பம் (எக்கணம்)

அகமறிந் திடப்பல சொன்னமெய்த் தெய்வமே
அருந்தமிழ்த் திருப்புகழ் அனந்தம் பாடி ஆடி
இகம்பரம் வாழ்ந்திடச் செய்வதும் மோட்சத்துக்(கு)
எண்மடங்குயர்ச்சி என்றெண்ணிடும்எனக் கப்பே(று)

எக்கணந் தருவாயோ—நின் திருவருள்
எக்கணம் பெறுவேனோ

## கீர்த்தனை 5

இராகம் : நாதநாமக்கிரியை. தாளம் : ஆதி

ஆனந்தக்களிப்பு.

பல்லவி

சிவசிவ சிவசிவ சிவனே—சிவ
சிவசிவ சிவசிவ சிவனே. (சிவ)

அநுபல்லவி

1 அவனவள் அதுவென நின்றாய்—தமிழ்—ஆசித்துத் தூதுமுன் ஆரூரிற் சென்றாய்
உவமையில் இயமனை வென்றாய்–என–துள்ளத்திற் பிரியாமல் ஒருப்பட நின்றாய் (சிவ)

2 முழுதும் நின்மேற் பழிபோட்டேன்—பெறும்
முத்தியிற் பெரிதென மூதருள் வேட்டேன்
அழுது நெக்குருகிட மாட்டேன்—உண்மைக்(கு)
அநியாயமாயுன்மேல் அநியாயம் சாட்டேன் (சிவ)

3 மேதினி வருந்துவ தேனோ—மகா
விட்டுணு நித்திரை மெய்யாச் செய்தானோ

நீதிசொல்நூல் வம்புதானே—உன்னை
நேர்சொல மற்றொரு நித்தனுள்ளானே (சிவ)

4 ஏனிந்த லோபம் நீகற்றாய்—பொல்லா
ராக்கதருக்குமுன் ஏனஙநாள் உற்றாய்
நானிங்கு பாடலேன் பெற்றாய்—என்னை
நால்வரிற் சேராமல் நாட்டுக்கேன் விற்றாய் (சிவ)

5 தில்லையிற் சொன்னசொல் பொய்யோ—அன்று
செப்புஞ் சொற்பொய்த்தாலும் திருவருள் மெய்யோ
கல்லைவிட் டெறிந்தாலும் ஐயோ—நல்ல
கதிசேர்ந்ததாகச் சொல்கதை என்னசையோ (சிவ)

6 நீசர் கைமேல் நிற்கலாமோ—உன்னை
நினைத்துள்ள பெரியோர்கள் நெறிவம்பாய்ப் போமோ
பாசத்தினூற் றவம்சாமோ—இந்தப்
பாருலகின்னமும் பஞ்சத்தால் வேமோ (சிவ)

7 போல்வதில்லாத் தனிவீட்டாய்—என்று
புகழ்ந்தோர் சிற்சிலர் நெஞ்சைப் போட்டாய்!
நால்வர் செய்திடும் விளையாட்டாய்—இந்த
ஞாலத்தில் ஒருவன் இந்நாள் செயக்காட்டாய் (சிவ)

8 **வடலூரரன்** பாடல்கள் கைப்போ—என்றன்
வண்ணக்கவிகளெல்லாம் வழுவானதப்போ
உடல்வீழும் முத்தியும் துப்போ—பிறப்(பு)
ஒழிக்கு மெய்ஞானமும் ஊராருக் கொப்போ (சிவ)

9 வஞ்சகத் தீக்குணம் உனதோ—அந்த
மாணிக்க வாசகர் மாத்திரம் தனதோ
எஞ்சலில் ஆணவம் எனதோ—உல(கு)
ஈரேழும் செய்ததும் எங்கள் புன் மனதோ (சிவ)

10 சுந்தரன் சொல்மட்டும் விலையோ—தமிழ்ச்
சுவையறிந் துரைத்திடும் தூயவர் இலையோ
வெந்தகைப் புலைமதம் நிலையோ—என்றன்
வினைப் பேயைக் கலியுடல் விலக்குதல் மலையோ (சிவ)

11 தரும சேனைத் தடுத்தாண்டு—நல்ல
சமயாசாரிப்பட்டம் தந்ததனை, ஈண்டு

வருமமுற்றுழல்வேன் சொற்பூண்டு—செய
மலியத் தந்தடியாருள் வைத்திடவேண்டும். (சிவ)

12 தகப்பன் செய்வேள்விக்குப் பொன்னே—மிகத்
தரவேண்டும் எனக்கேட்ட சம்பந்தன்முன்னே
மகத்துவம் பலகாட்டலென்னே—என்முன்
மழவிடை மிசையேறி வரலாகும் இன்னே (சிவ)

13 பட்டினத்தார் முதற்கொண்டு—சொல்லும்
பத்தர்க் கெல்லாம் வேண்டும் பரிசீந்தாய் பண்டு
கிட்டிய தொண்டரைக்கண்டு—வீணே
கெடுப்பானேன் இந்நாள் பல்கேலிகள் விண்டு (சிவ)

14 கனவில் வந்ததுபோலே—என்றன்
கண்முன்னும் வரிலுன்னைக் கடுப்பதார் பாலே
எனவிளங்கிடும் வெண்ணீற்றுலே—முழு
கிடுமென்னைச் சோதிப்பதேன் சொல்மேல் மேலே(சிவ)

15 மந்திர சாத்திரம் கடையா—நம்பி
வாடுகின்றோர்க்கருள் வழங்கிடத் தடையா
சந்திரசேகரச் சடையா—உமை
தன்னுடன் ஊர்ந்திடும் தவளமால் விடையா (சிவ)

16 அந்தரப் பொய்கள் விள்ளாதே—புலை
ஆடும்பொய் மதங்கள்மேல் ஆசைகொள்ளாதே
சிந்தனை யோரைத் தள்ளாதே—நல்ல
திருப்புகழ்க் கவியையும் சீ என்(று) எள்ளாதே

சிவ சிவ சிவசிவ சிவனே—சிவ
சிவசிவ சிவசிவ சிவனே.

## கீர்த்தனை 6 (பொது)

இராகம்: மோகனம் பல்லவி தாளம்: ஆதி

எப்படிச் செய்தாலும் செய்யுமே—திருவருள்
எப்படிச் செய்தாலும் செய்யுமே. (எப்)

அநுபல்லவி

அப்படித்தான் செய்யுமென்றும் இப்படித்தான் செய்யுமென்றும்
ஆரும்துணிந்து சொல்லற் கதிகார மில்லையில்லை (எப்)

**சரணம்**

சைவ வயிணவராம் சதுர்வேதத்தோரெல்லாம்
சமணர் புத்தருக்கஞ்சித் தாழச்செய்யினும் செய்யும்
பொய்வழக்கோரையெல்லாம் மெய்யர் வெட்டிக்கடலிற்
போடச் செய்யினும் செய்யும் பூதலத்தோர்களே (எப்)

பார்ப்பாரிற் பலர்சென்(று)ஓர் பறையனைக் கண்டு கெஞ்சிப்
பணியச்செய்தாலும் செய்யும், பார்ப்பானொருவன் முன்னே
தேர்ப்படை யோடெதிர்த்த அரசன் நடுநடுங்கித்
திரும்பிப் பாராமல் ஓடச்செய்தாலும் செய்திடும் (எப்)

கற்புடைய மங்கையைக் கணிகையாக்கினும் ஆக்கும்
கணிகையைக் கற்புடைய கன்னியாக்கினும் ஆக்கும்
வெற்பிருந்த இடத்தைப் பள்ளமாக்கினும் ஆக்கும்
வேலையைத் தூர்த்தொரு மேடாச் செய்யினும் செய்யும்(எப்)

காமிய மோட்சத்திற் கலக்கவிட்டாலும் விடும்
கடுந்தவத் தோன்பிறந்து கலங்கவிட்டாலும் விடும்
பூமியைச் சுவர்க்கத்திற் சிறக்கச் செய்தாலும் செய்யும்
பொன்னுலகிற் றீயிட்டுப் பொசுக்கச் செய்தாலும் செய்யும்
(எப்)

எறும்பை யானையாய்ப் படைத்திலங்கச் செய்தாலும் செய்யும்
யானையை யெறும்பாக்கி இளைக்கச்செய்தாலும் செய்யும்
வெறும்பையிற் பொருள்மிக விளையச்செய்தாலும் செய்யும்
மிகச் சேர்த்தபொன் கரியாய் வெருட்டச் செய்தாலும்
செய்யும் (எப்)

வைதவனுக்கு முத்தி வழங்கினாலும் வழங்கும்
வாழ்த்தியவன் கைகாலில் வல்விலங் கிட்டாலும்இடும்
பொய்தவிர் மந்திரத்தைப் பாழாக்கினாலு மாக்கும்
புலையர்பொய் மந்திரத்தைப் பொருளாக்கினாலும் ஆக்கும்
(எப்)

வேதாகமப்பொதுக் குருபரன் பதத்தாணை
வீட்டுணர்வும் சிவமாய் விளங்குமோர் தெய்வத்தாணை
சீதார விந்தன் சொன்ன நெறியேழின்மீதும் ஆணை
திருப்புகழ் முதலான செழுந்தமிழ்க் கவி ஆணை

எப்படிச் செய்தாலும் செய்யுமே—திருவருள்
எப்படிச் செய்தாலும் செய்யுமே.

## கீர்த்தனை 7

இராகம் : சாவேரி பல்லவி தாளம் : ஆதி

ஒருசித்தன் நிசத்தனு வாரானோ—எனக்கு
உள்ள கவலை முற்றும் தீரானோ (ஒரு)

அநுபல்லவி

அருமைப் பெருந்தமிழ்ச்சீர் ஆமாத்தூரில்
ஆண்ட நாயகன்றன் அருளால் என்முன்னே (ஒரு)

சரணம்

இடப வாகனத்தில் சிவன்முதற் றேவரும்
இருடியர் சித்தர்கள் முனிவர்கள் முதலோரும்
திடமிகு சொற்பனந் தனிற்கண்டு மறைவதால்
திருட்டுக் கொடுத்தவர் போற்றியங்குகின்றேன் ஐயோ (ஒரு)

அருட்சித்தி விரும்பாத அற்பத்தவசிகளும்
ஆடகம் பொருளென்னும் அசட்டுப் புலவர்களும்
இருட்டை வெளிச்சமென்று மகிழ்ந்தாற்போல்
இறுமாப்புற்(று) என்னிலை தெரியாமல் இகழ்ந்து
துள்ளுகின்றாரே (ஒரு)

இந்தஉலகும் பசுக்கூட்டமும் படும்பாட்டை
எண்ணிச்சற் றுயினும் இரங்காமற் போனாலும்
செந்தமிழ்ப் பெருங்கவிக் கூட்டத்தில் முன்னாகித்
திகழ்கின்றதாம் சந்தத்திருப்புகழ் விளைந்தேனும்

ஒருசித்தன் நிசத்தனு வாரானோ—எனக்கு
உள்ள கவலை முற்றும் தீரானோ.

## கீர்த்தனை 8

இராகம் : கமாஸ் பல்லவி தாளம் : ஆதி

தெய்வமே தெய்வமே—ஐயோ உண்மைத்
தெய்வமே தெய்வமே (தெய்வமே)

அநுபல்லவி

சைவ முதலாம் நல்ல சமயமெல்லாம் நொந்து
தட்டழிந்திடக்கண்டு, சந்ததம் கொலைபுலை

செய்வனவானபுன் சமயமெல்லா மிகச்
சிறப்புறக் கண்டதுன் திருவருட் கழகாமோ (தெய்வமே)

**சரணம்**

**வசைகவி** யாண்டான் சொற்கவியும் பலித்தபாரில்
**வடலூரான்** பாடலும் வம்பாகி விடலாமோ
**திசை**யெங்கும் புகழ்பெறச் சித்தரும் விளங்காமல்
திருடர்போல் மறைந்து தேகத்தோ டுறலாமோ
**தசை**விருப்போர் சிலர் பசுவின் கன்றையும் தன்கைத்
தடியினுற் கொலைசெய்து சமைத்துண்டுவக்கலாமோ
**விசை**யனுக் கொப்பான வீரனொருவன்வந்து
மேதினிமகள் மகிழ வென்றிகொளச் செய்யாயோ (தெய்வமே)

சூரியன் முதலிய கடவுளராய் என்னுள்
தோற்றிய தோற்றத்தின் தொகைமுற்றும் பொய்தானே
காரிய காரண முணராத மூடர்போல்
காலங்கழிக்க என்னைக் கருமத்தாற் கட்டலாமோ
பாரியும் மக்களும் உள்ள இல்லறத்திலும
பசையற்ற துறவிலும் பதிந்திடச் செயலாமோ
பூரியர்க் கானந்தம் கொடுத்து மேன்மக்களைப்
புண்படுத்திடலான பொல்லாங்கும் தவிராயோ (தெய்வமே)

பாடிய பாடற்கோர் கணக்கில்லை யெனும் பெரும்
பாக்கியம் கொடுத்தும் சொற் பலிதந் தந்தில்லாயே
நாடிய படியெல்லாம் விளையாடும் பேராசை
நான்கொள அன்றே நடத்திடுமவனுரோ
கோடியன்பர்கள் முன்னுள் திருவருள் செயல்பெற்றுக்
கொண்டதும் பொய்தானே குருபாதமும் பொய்யோ
தேடிய பொருளிலும் ஆயிரம் பங்குயர்
திருப்புகழ்க் கவிகளும் தித்திக்க வில்லையோ

தெய்வமே தெய்வமே—ஐயோ உண்மைத்
தெய்வமே தெய்வமே.

## கீர்த்தனை 9

இராகம் : நவரோஜ் பல்லவி தாளம் : ஆதி

ஐயை யோவுன்னை யன்றிமற் றோர்துணை
அறியேன் அறியேனே (ஐயை)

அநுபல்லவி

தெய்வம்என் பவையெல்லாம் வசிப்பதற் கிடமாகித்
தினமும்விண் ணினில்வரும் செங்கதிர்ச் சோதியோ (ஐயை)

சரணம்

இடப வாகனத்திற் கவுரியும் முருகனும்
இடத்தில் வசிக்கவரும் ஈசுர மூர்த்தியே (ஐயை)

சிங்க வாகனத்தில் அங்குச பாசம்கை
சேர்த்து மரகதம் போற் றிகழ்கின்ற சத்தியே (ஐயை)

கருடவாகனத்தில் சங்குசக்கரங்கொண்டு
கமலையுடன் உலவும் காகுத்தக் கடவுளே (ஐயை)

ஆகுவாகனத்தில் ஐந்துகையுடன் ஏறி
அரியவல் லவையுடன் அவிரும் கணபதியே (ஐயை)

ஆறுமுகத் தொடுகலாப மயிலில் இரண்(டு)
அரிவைய ருடன்வரும் அயில்வேல் முருகோனே (ஐயை)

ஆரார் எப்படிப் பாவனை செய்தாலும்
அப்படி விளங்கிடும் அருட்கடல் வெள்ளமே (ஐயை)

தெய்வமொன் றேயெனும் தெளிவுமெய் யடியவர்
திருப்புகழ் விருப்பும்செய் செழுந்தமிழ் வாரியே (ஐயை)

ஐயை யோவுன்னை யன்றிமற் றோர் துணை
அறியேன் அறியேனே.

## கீர்த்தனை 10

இராகம் : ஹம்ஸத்வனி பல்லவி தாளம் : ஆதி

கொன்று போடாதே தெய்வமே—அநியாயமாய்க்
கொன்று போடாதே தெய்வமே. (கொன்று)

அநுபல்லவி

நன்று விளங்கித்தீமை நசித்துப்போ கும்படியே
நாளும் விரும்பியுன்னை நம்பித்துதிக்குமென்னை (கொன்று)

சரணம்

ஆறுமுகனு வந்தன்று, அருணகிரிதான் என்றாய்
அரனுகி வந்துகந்த னுவுன்னைப் பார்ப்பேன் என்றாய்

வீறுபரை யாய்வந்துன் அருட்குறிப்புணர்த்தினாய்
விட்டுனு வாய்வந்து வெற்றியுண்டாம் என்று சொன்னாய்
(கொன்று)

ஆனைமுகனுவந்தன்றச்சம் தவிர்த்ததுவும்
ஆதித்தனுயென் நெஞ்சுள் அடிக்கடி வந்ததுவும்
ஏனைத்தே வரும்முனி வருமாகித் தோற்றியதும்
யாதும் பயனில்லாமல் இழிந்துபோம்படி வம்பில் (கொன்று)

ஆகாரம் நித்திரை காமம் பயமுதலாம்
ஆபத்தெல்லாம் தவிர அரியமந்திர சித்தி
யோகாநு பூதிபெற்று ஞானக்கடலிற் படிந்(து)
உடலும் பிரணவமாய் உயர்ச்சி வேண்டினேன் ஐயோ
(கொன்று)

**வடலூரான்** முதலானோர் வந்துவிளங்கிடவும்
வாஞ்சித் திரவுபகல் வருந்தித் தவம்செய்கின்றேன்
கடலில் ஆற்றிற் குளத்தில் தீயில்முன் இட்டதமிழ்க்
கவிதைத் திருப்புகழும் கையிற்றந்தாள வேண்டும்
கொன்றுபோடாதே தெய்வமே—அநியாயமாய்க்
கொன்றுபோடாதே தெய்வமே.

## கீர்த்தனை 11

இராகம்: பியாகடை — பல்லவி — தாளம்: ஆதி

காமன் கணை பொல்லாதே—இவ்வுலகத்திற்
காமன் கணை பொல்லாதே. (காமன்)

அநுபல்லவி

தாமதக் குணத்தோரை என்னபாடு படுத்துமோ
சத்துவக் குணத்தோரையும் தவிக்கவிட்டுக் கெடுக்கும் (காமன்)

சரணம்

பதினாறு வயதுள்ள ராசகுமாரனொரு
பல்லுமில்லாக் கிழவிபால் மயங்கவும் செய்யும்
அதிக இங்கிதமுள்ள குமரிஒருத்திக் கைக்கோல்
அன்றி நடவாதானை அணையும் படிக்கும் செய்யும் (காமன்)

உயர்ந்த குலத்தொருத்தி தாழ்ந்த குலத்தோனுடன்
ஓடிப்போ கவும்செய்யும், உயர்ந்தகுலத்தொருவன்

அயர்ந்து கீழ்க்குலத்தொரு மங்கையைக்கண்டு கெஞ்சி
அடிபணிந்து ஏவல்செய்(து) அழுந்தவும் செய்திடும்(காமன்)

அரசன்மகள் வெளிப்பட்(டு) ஆண்டி ஒருவன்பின்னே
அன்னமிரந்தருந்தி அலையவும் செய்திடும்
இரவலன் மகளோஓ அரசன்வர் தெடுத்துத்தண்
இட்டமனை விக்கும்மேல் ஏற்றிவைக்கவும் செய்யும் (காமன்)

திரிமூர்த்திகள் முதற் றேவரும் முனிவரும்
சீரழிந்த கதைகள் செகத்தினிற் பலர் சொல்வார்
தெரிய இந்நாளினிற் றிருப்புகழ்க் காரன்முதல்
தீவிரத் தவர்சிலர் செய்கையும் சாட்சியாம்

காமன் கணை பொல்லாதே—இவ்வுலகத்திற்
காமன் கணைபொல் லாதே.

## கீர்த்தனை 12

இராகம் : மத்தியமாவதி பல்லவி தாளம் : ஆதி

இந்த அநியாயத்தை ஆருடன் சொல்லிநான்
இகதலத் தழுவேனே. (இந்த)

அநுபல்லவி

சுந்தரன் பாடற்குத் தூதுபோன சிவனும்
தொண்டன் பாடற்குப் பின்னே தொடர்ந்துபோகிய மாலும்
சந்தத் தமிழ்க்கவிகள் அனந்தமாகக் கேட்டும்
சற்றும்உள் இரங்காமற் சளஞ்செயத் துணிந்தாரே (இந்த)

சரணம்

கயிலைமேல் ஔவையை விட்ட கணபதியும்
கற்கிமுகியை வெற்பைக் கூடிந்தவேல் முருகனும்
மயில்நிகர் சாயைகொண் டொளிர்பரா சத்தியும்
வானத்தில் நாடொறும் வரும்சூ ரியன்றனும்
பயிலுமுத் தமிழ்க்கவி கேட்டும் நான் விரும்பிய
பயன் உதவாவம்பு பண்ணிய தல்லாமல்
வெயிலுமிழ் செண்டுடைச் சாத்தனும் அளகையில்
வேந்தனும் துதிகொண்டு வெதும்பச் செய்தார் அந்தோ
(இந்த)

கலசமுனி தமிழை நீசர்தம் மொழியின்கீழ்க்
கற்களிலெழுதிடக் கண்டதொன்(று) அந்தணர்
புலையரைச் சேவித்து வயிறுவளர்ப்ப தொன்று,
போர்வீரர் நெருப்பிட்டுப் பொசுக்கப் படித்ததொன்று,
மலரவன் சொலும்வேதம் பலங்கெட்டுத் தடுமாற
மனிதர்செய் வேதங்கள் வல்லமைபெறு லொன்று,
பலமதத் தோர்களும் என்றெய்வம் உன்தெய்வம்
பரமென்று போராடப் பணம் தெய்வ மானதொன்று (இந்த)

சைவமும் வயிணவந் தானும்ஓர் குருச்சொன்ன
சத்தியம் அறியாத சண்டாளார் இறுமாப்பும்
மெய்வழக் கினர்உணர் வண்ணத்தைப் பார்க்கிலும்
வெண்டளை மேலென்னும் வீணர்தம் குதர்க்கமும்
கைவலியே துணையாம் என்று கொடுங்கோல்செய்
காவலர் மகிழ்ச்சியும் கண்டுகண் டுளம்நொந்து
தெய்வமொன் றேஎனத் தெளிந்து நாடகமுதல்
திருப்புகழ் வரைபாடித் தியங்குகின்றேன் இனி

இந்த அநியாயத்தை ஆருடன் சொல்லிநான்
இகதலத் தழுவேனே.

## கீர்த்தனை 13

இராகம் : குந்தலவராளி பல்லவி தாளம் : ஆதி

ஐப்பசி மாதத்தில் இப்பனிப் பெய்கின்ற(து)
அகில மெப்படி உய்யு மோ (ஐப்பசி)

அநுபல்லவி

மைப்படும் கண்டத்தன் மால்முதற் றேவரும்
வண்டமிழ் வெறுத்திட்டுத் திண்டுமிண்டு செய்கின்றார் (ஐப்பசி)

சரணம்

தேக்கிய மறையவர் பறையர்பின் செல்கின்றார்
செங்கோல் வெறுத்துமன்னர் தீக்கொடுங்கோல்கொண்டார்
யோக்கியந் தவிர்ந்து செட்டிகள் பொருள் சேர்க்கின்றார்
உழுதொழி லோர்பிறர்க் குதவிசெய் தலைவிட்டார் (ஐப்பசி)
என்போலுந் தவமுள்ளார் ஆசைக் கடலுட்பட்டார்
இயற்புலவோர் நிந்திப் பேதொழி லாயினர்

மின்போலும் மடந்தையர் கணவன்சொற் கடங்கிலார்
மேன்மக்களும் தாய்தந்தை வெதும்பச் செய்கின்றார்கள் (ஐப்பசி)

பனிக்கண் திறந்தால் மழைக்கண டைந்திடுமென்று
பாரில்மின் ஞர்களும் பகர்வதுண்டே, இனி
அநித்தியம் நித்தியம் தெரிந்தசற் குருவந்திவ்
அநியாயங்களை மாற்றினால் நன்மையாம் ஐயோ (ஐப்பசி)

தருமமும் சத்தியமும் நின்று மறைந்தாலும்
சருவவல் லமைத்தெய்வம் தனைநீசர் சொல்லாலும்
கருமம்மேல் என்றுபத் தரும்அஞ் சுவதனாலும்
கவின்திருப் புகழைப்புன் கவிஞர் எள்ளுவதாலும்

ஐப்பசி மாதத்தில் இப்பனிப் பெய்கின்ற(து)
அகில மெய்ப்படி உய்யு மோ.

## கீர்த்தனை 14

இராகம் : கரகரப்ரியா — தாளம் : ஆதி

### பல்லவி

இங்கிலீசுக்காரர் அநியாயக் கொடுமையை
என்னென்று சொல்வேன் அம்மா ! (இங்கி)

### அநுபல்லவி

பங்குக்குத் தகப்பன்பால் மகன்சண்டை செய்வதும்
பாரிக்கு நாயகன் பயப்படு கின்றதும்
எங்கும்பசுக்கள் மேய்தற் கிடமற்றுப் போனதும்
எளியவர் வழக்கிழந் திடுவதும் முதலாக (இங்கி)

### சரணம்

சப்பாத்திக் கள்ளிக்கும் தரிசுக்கும் தீருவை
தடையறக் கொடுத்திடத் தண்டங்கள் செய்வதும்
மெய்ப்பார்ப்பார் வீட்டினிற் பிறந்த பிள்ளைகளும்
வேதங்கள் படியாமல் வேலைகேட் டலைவதும்
துப்பாக்கி எனும்திருட் டாயுதம் வாள்முதற்
சொல்லும்நல் ஆயுதத் தொகைகளை வெல்வதும்
பொய்ப்பாட்டுக் கவிஞர்க்குப் புகழ்ச்சியும் மெய்ப்பாடற்
புலவருக் கிகழ்ச்சியும் பொலிவதும் போலுள்ள (இங்கி)

உயிர்ப்பசுத் தோல்உரிக் கின்ற பொல்லாரையும்
ஒறுத்திடத் தக்கவன் ஒருவன் இல்லாமையும்
மயிர்க்கும் மலத்தினுக்கும் எலும்பிற்கும் விலையீந்து
வாங்குகின் றோர்பெரு வாழ்வடைந் திடுவதும்
செயிர்க்கு வித்தாகிய கள்ளும் சாராயமும்
தேனுக்கும் மேலாய சிறப்புற்று விளங்கலும்
பயிர்த்தொழில் செய்வோர்க்கும் மேலான லாபங்கள்
பாவி வக்கீல்களே படைப்பதும் ஆதியாம் (இங்கி)

பசுவைத் தெய்வமென்றோதும் சதுர்வேத சாரத்தின்
பயன்களெல்லாம் வெறும் பாழேபோல் மறைந்ததும்
கொசுகொத்த சில்லரைத் தேவதைகளை நம்பிக்
கொண்டாடு கின்றவர் குதுகுல மலிந்ததும்
அசுவத் தாமன் அநுமார் முதலோர் பெற்ற
ஆண்மைகள் எல்லாமும் அவமாகிப் போனதும்
சிசுவிற் கொப்பாகவே சிற்றெறும்பையு மெண்ணும்
திருப்புகழ் உடையவர் தியக்கமும் காட்டிடும்

இங்கிலீசுக்காரர் அநியாயக் கொடுமையை
என்னென்று சொல்வேன் அம்மா !.

## *கீர்த்தனை 15

இராகம் : பைரவி தாளம் : ஆதி

பல்லவி

ஏனோ அழைத்தும்நீ யான்பூசித்திடும் வேலை
எண்ணி வணங்கவந் தில்லாய் (ஏனோ)

அநுபல்லவி

வானோ டரும்புகழ், வீரகேர ளம்புதூர்
மகராச ராசச்சிரீ மருதப்பப் பாண்டியா

மற்கடக்குணம், வித்துவச்சன
ருக்குள் உற்(று)அ துணர்ச்சி உற்றனை (ஏனோ)

சரணம்

யுத்தஞ்செய் வோர்தலை உருட்டும்வாள் பிடித்தநாம்
ஊர்தொறும் போய்மண்டை ஓட்டில் இரந்துண்ணும்

*வீரகேரளம்புதூர் ஜமீன்தார்;இருதயாலய மருதப்பத்தேவர்க்கு அழைப் பனுப்பியும் வராமைகருதிப் பாடியது.

பித்தன்ம கன்கைவேலைப் பார்க்கப் படாதென்னும்
பெருமைபா ராட்டியோ பெருமாள்விழி முன்னுள்

(முடுகு) பெற்ற பொற்கொடி கட்குவப்பு மிகப்பொருத்துபு
யத்திலுற்றது
பேசுதொண்டரெலாம் விரும்பருளாவ(து)
எண்டருசூரை வென்றது (ஏனன்)

கோடிமன்னர் கெஞ்சிக் கேட்டாலும் கொடுத்திடக்
கூடாத தமிழ்விலை கூறிவருதல் கண்டு
சாடியில் பொன்வைத்துக் காக்கும் விரும்புமூடத்
தன்மையுடையாருடன் என்னையும் மதித்தாயோ

(முடுகு) சாலிவாகனன் ஆதியோர்விழை-வோடுமாறுமுன்
ஓதினேனது
சரதம் என்றுகொள்! எனது நெஞ்சிடை-அணுவும்
வஞ்சகம்இலை வலிந்துமுன் (ஏனன்)

நின்குடைக் கீழுள்ள நகர்த்தொகைக் கதிகமா
நின்மக்க ளாம்படி நினைத்தாலும் நினைத்திடும்
என் குறிப்பின்படி அருள்செய்து கலிப்பேயை
இருப்புச் செப்பிலடைத்து நெருப்பிற் போடினும்போடும்

(முடுகு) ஏழ்கடற்குள்ளும் ஓடிரத்தம்அ-ளாவிடச்
சமராடும் வெற்றியோடு
ஏய்ந்த(து) அண்டர்பிரான் பெருந்துயர்-
தீர்ந்துயும்படி தோன்றல்வம்பல (ஏனன்)

இந்தப்பல்லவி தொட்டே நூறு சரணம்பாடி
ஏற்பித்தாலும் ஏற்பிப்பேன் என்றும் அறிவாய்!என்
சந்தத்துள்ளலும் ஒரு பாடலிற் காட்டியும்
தக்கவுதவிகள்செய் விக்கார்போன் றிருக்கின்றாய்!

(முடுகு) தனையனூர்பலர் மகிழுமாறுநல்-கியகுணாகர! இருதயாலய!
தழையும் ஈடுறு கிளுவையாதிப!-முருகதாசனேன்
உரிமை மீறியும்

ஏனன் அழைத்தும்நீ யான்பூசித்திடும் வேலை
எண்ணி வணங்கவந் தில்லாய்.

## கீர்த்தனை 16

இராகம் : தோடி பல்லவி தாளம் : ஆதி

இன்னமும் இரங்கவில்லையோ—நின்திருவுள்ளம்
இன்னமும் இரங்கவில்லையோ (இன்னமும்)

அநுபல்லவி

அன்னம் இரந்தருந்தி ஆகம் தளர்ந்த தன்றி
அம்பொன் இரந்துமனம் நொந்துபோனேன் ஐயோ (இன்னமும்)

சரணம்

முன்னம் உரைத்தமொழி ஆயிரம்கோடி, யந்த
முறைப்படியே உலகில் முடித்திடக் காணவில்லை
இன்னமும் அப்படியே சொன்னபோதிலும் உன்னை
யானென்ன செய்வேன் என்றன் மானம் போகாமற்காத்தற்(கு)
(இன்னமும்)

வேந்தர்முதலானோரைக் கண்டுபுகழ்ந்து கெஞ்சி
வெட்கிமிகுத்துமன துட்கிப் போனது பொய்யோ
சாந்தகுணம் பொருந்தும் மேலவர் தமக்குள்ள
தன்மையினைக் கெடுத்தென் கன்மந்தனைத் தவிர்க்க (இன்னமும்)

பத்தியுள்ளார் மிகுக்கும் பாலைநகரில் வளர்
பரமகுருபரனே ! பன்னிரு கைக்குகனே !
சத்திவடி வேல்கொண்ட சண்முகனே ! முருக
தாசனெனப் பேர்தந்த நேசமுடையவனே !

இன்னமும் இரங்கவில்லையோ—நின்திருவுள்ளம்
இன்னமும் இரங்கவில்லையோ

## கீர்த்தனை 17

இராகம் : பூரிகல்யாணி பல்லவி தாளம் : ரூபகம்

வினையாகிலும் தவிர்த்தாள்—சண்முகநாதா !
வினையாகிலும் தவிர்த்தாள் (வினை)

அநுபல்லவி

நனைவார் சடையோனும் நறுந்தமிழ் முனியும்போல்
நானிலம் தனில்வாழும் நலந்தரமாட்டாயேல்
நாயினும் கடையாயதீயரும் ஏசிடும்படி சூழும் ஓரிரு (வினை)

### சரணம்

அறமே உயர்வென்னும் அடியா ருடன்கூடி
ஆறெழுத்தாற்சித்தி அநந்தம் கோடி செய்து
திறமேவிய தமிழ்ப் புலவரெல்லாம் மெச்சும்
திருப்புகழால் உன்னைத் தினமும் துதித்திறைஞ்சிச்
சேவலங்கொடியே செயம் செயம் ஆகும் என்பவர்
யாவரும்புகழ்
சீர்பெறும்படி யான் விரும்பினன், நீயிசைந்திலை யாகிலும்பழ
(வினையா)

மதுராபுரிச் சங்கப்பலகையிலேறவும்
வானவர் கூடிடும் மலர்கொண்டு மீளவும்
புதுமாமணி யற்று வீழ்ந்திடப் பாடவும்
புரவலர் வழங்கிடும் பொருள்பெற்று மகிழவும்
பொன்செய் ஆண்மையினுல் விளங்கவும் அன்றி ஆயிரம்
வாறுன் அன்பர்கள்
புந்திபோல் விளையாடல் கண்டனை, இந்தநாளில் என்மே
லடர்ந்திடும் (வினையா)

மயில்வாகனத்தின் மேல்வருந்திறல் முருகோனே
மகவான் மகளுக்கும் வள்ளிக்கும் மணவாளா!
அயிலேந்திய செங்கை ஈராறுடையானே!
ஆரணன்தனைக் குட்டி அழும்படி அடைத்தோனே!
அருமறைத் தலையாய மந்திர—மொழியினுட்பொருள்
ஓதிடும் தொழில்
அருணைவெற்பரு கேழுயன்றுறை—குருபரக்குகனே
இரங்கிஎன்
வினையாகிலும் தவிர்த்தாள்—சண்முககாதா!
வினையாகிலும் தவிர்த்தாள்.

## கீர்த்தனை 18

இராகம்: தங்யாசி | பல்லவி | தாளம்: ஆதி

இந்த மோடி வந்ததேனையா—என்மேல் உனக்(கு)
இந்த மோடி வந்ததேன் ஐயா

### அநுபல்லவி

அந்த நாள் என் வீட்டுக்குநீர் சொந்தமாயிருந்துன்மீதில்
ஆவல்கொண்டேனென்று சொல்லிக் காவலும் காத்தீரே
இப்போது (இந்த)

சரணம்

என்னிலும் அழகுள்ள கன்னியரைக் கண்டீரோ
இல்லையென்றால் என்பேரிற் பொல்லாப் பேதேனும் உண்டோ
அன்னிய மாதரோ டென்னையும் மதித்தீரோ
அடியாள் உமக்குச்செய்த கொடுமைதான் பலித்ததோ (இந்த)

வேடமகளையன்று கூடஎனத் துணிந்து
வேங்கைமர மாய்நின்ற பாங்கையும் மறந்தீரோ
மூடவுலகம் வசை பாடுமென் றறியீரோ
முன்னும் பின்னும் பாராமல் என்ன ஞாயமோ இந்நாள் (இந்த)

சமரச நலந்தரும் குமரகுருபரனே !
சந்தத் தமிழ்க் கிரங்கும் கந்தசுவாமியே !
நமனை வென்றிடச் செயும்விமல சொரூபனே !
நாரணன் மருகனே ! பூரணப் புலவனே !

இந்த மோடி வந்ததேனையா—என்மேல் உனக்(கு)
இந்த மோடி வந்ததேன் ஐயா

## கீர்த்தனை 19

இராகம் : காபி | பல்லவி | தாளம் : ஆதி

இந்தப் படிக்குநீ வரங்கொடுத் தாண்டென்முன்
என்றும் வந்தருள் வாயே. (இந்தப்படி)

அநுபல்லவி

எந்தப்படிக்குநான் சொன்னாலும் அப்படி
இமைகொட்டி விழிக்குமுன் எங்கும் நடக்கவேண்டும்
செந்தில் நகர்க்குகனே நீஎன்னிடத் தெப்போதும்
திவ்விய மங்கள மாக இருக்கவேண்டும் (இந்தப்படி)

சரணம்

தூய செந்தமிழ்க்கவி பாடியுனக்குத்தானே
சூட்டிச்சலிப்பில்லாமல் துதித்து மகிழவேணும்
தீயகுணங்களெலாம் தவிர, நற்குணமெல்லாம்
சேரவந்தடைந்திடச் சேய்போலிருக்கவேணும்
மாயவாழ்வைநம்பி யிவ்வுலகத்தில் வீணே
வாணாளைப் போக்குவார் வாஞ்சை ஒழியவேணும்
காயமுதலாகிய மூன்றினாலும் உனக்கே
கணக்கற்ற பணிசெய்து களிப்புற்றிருக்கவேணு (இந்தப்படி)

என்மனம் கொண்டமட்டுன்னை யலங்கரித்(து)
எவரும் மகிழ்ந்திட யான்பூசித்திடவேணும்
நன்மனம் கொண்டநின் அடியருக்கடியனாய்
நாளுந் திரிந்தவர் பாதம்பணியவேணும்
கன்மம் உபாசனை ஞானம் என்றெடுத் தோதும்
காண்டம் மூன்றும் சொல்லும் கருத்தை யறியவேணும்
மன்மதனும் பிரமதேவனும் ஏமனும்
வணங்கிஎன் சொற்படி வசித்திடப் பெறவேணும்
(இந்தப்படி)

மெய்யடிவர் நெஞ்சில் வீற்றிருந்தருள்வோனே
வெற்றிவேலெடுத்து விளையாடும் செவ்வேளே
செய்ய மயிலிலேறி வலம்வந்த முருகோனே!
சிட்டிக்கும் பிரமனைக் குட்டிய திறலோனே
வையகத்தோர்களும் வானகத்தோர்களும்
மற்றுமுள்ள உலகில் வசிக்கின்ற யாவரும்
பொய்யடிமை யில்லாதான் முருகதாசன் என்றென்னைப்
புகழ்ந்திடக் கேட்டுள்ளம் மகிழ்ந்துருகிட வேண்டும்
இந்தப் படிக்குநீ வரங்கொடுத் தாண்டென்முன்
என்றும் வந்தருள் வாயே.

### கீர்த்தனை 20 (பின் விரைவு)

இராகம்: பிலஹரி | பல்லவி | தாளம்: ஆதி

இப்படிச்சோ திக்கலாமோ—என்னை நீ வம்பில்
இப்படிச்சோ திக்கலாமோ (இப்படி)

அநுபல்லவி

எப்படிப் பார்த்தாலுமிவன் சுப்ரமணியன் தொண்டன்
என்றிந்த வுலகஞ்சொல் கின்றதைக் கேட்டிருந்தும்
ஏழ்தலத்தரும் நகைக்கச் செய்தொரு
பாறையிற்கிணறு வெட்டச் சொல்லியும் (இப்படி)

சரணம்

செத்தபாம்பெழுந்து கொத்தித் துரத்தினாற்போல்
தீர்ந்தஏட்டணை மூன்றும் சார்ந்து வருந்தச் செய்தாய்
தத்துவ சோதனையின்றிச் சித்திகளில் ஆசைகொண்டு
சந்ததமும் மனது நொந்து புலம்ப விட்டாய்

தமிழ்நயந்தெரி யார்கடைவாசலில்
அவர்தரும்பொரு ளாசையினால் அநு
தினமலைந்துத் வாமையினால் மிக
மறுகிடும்படி காணவும் நாணிலை (இப்படி)

பண்டுகப் பலிலேறிக் கொண்டுவந்த பொருளும்
பாழ்படச் செய்துகடன் சூழ்துயரால் இளைக்கக்
கண்டுமிரக்க மின்றித் திண்டுமிண்டுகள் செய்து
காலங்கடத்துவதுன் சீலத்துக் கிசைந்ததோ

கனவில்வந்து வந்தோதிய வாய்மைகள்
முழுமையும்பொ யென் றலும் ஒரேசொலை
வெகுதரஞ் சொல்கின் றுய் அதிலாகிலும்
நிசம்விளங்க இன் றேர் விளையாடல்செய் (இப்படி)

விண்ணவர் ஊர்புரக்கும் தண்ணருட் குமாரனே
மின்னிகர் வேலணியும் பன்னிரு தோட் குகனே
வண்ணமுலைக்குறத்தி எண்ணமறிந்தவனே
மருப்பொலி கடம்பைநேர் திருப்புகழ்க் கினியோனே

வாசவன் தன தானை மகட்கதி
நேசன் என்பவர் பாசமொழித்தருள்
வாழ்வில் ஒன்றிடு மாறு விடுத்தருள்
வாய்! என்நெஞ்சறி யாய் என நித்தமும்

இப்படிச் சோதிக்கலாமோ—என்னை நீ வம்பில்
இப்படிச் சோதிக்கலாமோ.

## கீர்த்தனை 21

இராகம்: செஞ்சுருட்டி பல்லவி தாளம்: ஆதி

சத்துரு சங்காரத் தெய்வமே—அரோகரா
சத்துரு சங்காரத் தெய்வமே

அநுபல்லவி

மித்துரு பரிபாலனத் தெய்வமும் உனையன்றி
வேறில்லை என்றறிந்த மெய்யும் பொய்யாய் விடுமோ (சத்துரு)

சரணம்

ஆனைமுகனை விட்ட அண்ணன் முதலாவந்த
அனந்தம் பகையும் வென்றோர் ஆளாக்கிக்கொண்ட நீ
பூனையை நிகரிடைச் சந்நாசி பகையினுற்
பொன்றிடச் செய்வையோ, புகழ்விளைத்திடுவையோ
(சத்துரு)

தன்னையொப் பாமொரு சுப்பிர மணியத்தைத்
தந்திமுகக் கடவுள்தன்னை, வல்வடுகனைப்
பின்னையும் பலபல தேவரைச் செயித்தநீ
பேய்கருப்பண்ணனுக்குப் பின்னிட வேண்டாம்சொன்னேன்
(சத்துரு)

இந்தப் பனைமுறியப் பாடிய பாடலும்
என்மகள் திருமலைக் கியம்பிய கவிகளும்
மந்தப்பட்டால் அந்த இளப்ப முனக்கிலையோ
மயில்மீதி லேறிக்கொண்டு மலைதோறும் திரிவானே(சத்துரு)

எத்தனை தேவரை யான் துதித்தாலும் தினம்
இரவில் நித்திரை செய்போதில் யாரைத் துணைகொண்டுள்ளேன்
அத்தனை தேவரும் நீ என்றறிந்தும் உள்ளேன்
அடியனேன் உள்வந்தன் றருணகிரிதான் என்ற

சத்துரு சங்காரத் தெய்வமே—அரோகரா
சத்துரு சங்காரத் தெய்வமே

## கீர்த்தனை 22 (பதம்)

இராகம் : சிந்துபைரவி பல்லவி தாளம் : ஆதி

என்றைக்குத் தருவாயோ—நின்தரிசனம்
என்றைக்குத் தருவாயோ

அநுபல்லவி

கொன்றைச் சடாடவி குலங்க நடிப்பவனும்
குறுமுனி நாதனும் கூடித்தினம் புகழ
அன்றைக்கு நீயொரு கனவிற் குருவடிவம்
ஆகவந் தெனக்கினிது(து) அளித்தவரம் பலிக்க

(சந்தம் விரைவு)

அற்புதக் கவுமாரமிகுந்திட—விற்பனக்கவிவாணர்புகழ்ந்திட
அருணகிரிக்குச் செனித்தமாதவன்—எனுமொழிமெய்ப்
பட்டிடக்கெடாநலம் (என்றை)

பாடிய வண்ணமே பலித்திடக் காணவும்
பாதகர் கூட்டங்கள் பறந்திடச் செய்யவும்
நாடிய படிக்கெல்லாம் பெற்றுளம் தேறவும்
நானிலமும் புகழும் நன்மைகொண் டோங்கவும்
வாடிய பேரெல்லாம் மகிழ்ந்திடக் கொடுக்கவும்
மன்மதனை விதியை மறலியைச் செயிக்கவும்
கூடிய மட்டுக்கும் தவம் செய்து போற்றவும்
கொல்லா விரதமே குறிஎன்று பிடிக்கவும்

(சந்தம் விரைவு)

குக்குடக்கொடியே உயர்வென்பவர்—
முத்தமிழ்க்கவி பாடி அதன் பொருள்
முற்று முத்தம மாமென நம்பிடும்
வித்தகர்க் குறவாகவும் மங்கையர்

குவளைமலர்க் கட் சிமிட்டிலேமயல்
பெருகி அவர்க் கொப் பெதைச் சொல்வோமென
உருகிடும் மட்டித் தனத்திஞேர்பகை
யெனவுலகத் திற் றுதிக்க வாழவும் (என்றை)

மயில்வா கனத்தின்மேல் வேலாயுதம்கொண்டு
வலத்துமிடத்துமிரு மாதர்கள் இருந்திடச்
சயிலா திபனென்று முனிவரும் தேவரும்
தவத்தோர்களும் தமிழ்த் தலைவரும் துதிசெய்யக்
குயிலேயாமெனும் இசையுடன் அரம்பையர்
கொங்கை முகம் குலுங்கக் குலுங்க நடம்புரியும்
ஒயிலாகத் தும்புரு நாரதன் வீணைகொண்டு
உள்ள முருக இன்ப வெள்ளம் பெருகப்பாட

(சந்தம் விரைவு)

ஒப்பிலா துயர் வீரர்கள் சுற்றிட—
மிக்க பூதர்கள் பேரிகைமுற்பல
கொட்டும் வால்வளை காகளம் ஒத்ததும்—
மொத்தலோடு ஊதிவரத்தினம்

உரிமையொடென் சொப் பனத்திஞேடுயர்
நனவினும் வந்தற்புதச் சராசரம்
உதவியும் அன்பிற் பிறப்பதாகிய
பொடிநிறையும் பொற்புடைப் பனீரிலை (என்றை)

மலைநிலந் தோறும் நின்றாடிய குமரனே!
வாரணக் கொடிகொண்ட காரணப் புலவனே
சிலைவேடுவர்தம்மைக் கொன்றுமுன் எழுப்பிய
சிவகுரு நாதனே தெய்வ சிகாமணியே!
கலைமகள் கொழுநனும் மாயனும் ஈசனும்
கரங்குவித்திடும் கருணை விலாசனே!
நிலைதெரிந் தடங்கிடு முனிவருக் கெளியனே!
நித்திய மாகிய சத்திய ரூபனே!

(சந்தம் விரைவு)

நீபமுறும் பொற்புயத்தனே வட—
மேருநடுங்கக் குதித்து நேர்வரு
சூரனைவென்றக் கணத்திலேமிக—
வானுறு துன்பப் புழுக்கமாறிட
நிமலவினோதக் கடைக்கணொலொரு
குறுநகைவாயிற் சிறக்கநாடிய
குருபரனேசற் றருட்செய் வாயென
மொழிபவ ரோடுற்றிருக்கு மேன்மையை
(என்றை)

## கீர்த்தனை 23

இராகம் : ஆனந்தபைரவி பல்லவி தாளம் : ஆதி

நினைக்க நினைக்க அருளானந்தவாரிதி
நிறைந்து ததும்பிடுமே.

அநுபல்லவி

அனைத்துலோகமும் போற்றும் வடவொழுகையிற் செவ்வேள்
அந்தரங்கமாய் என்னுள்வந்த ஞய் யாரத்தை
அக்கணத்தில்என் மற்கடக்குணம்
முற்றும் விட்ட முதிட்ட நட்புடன் (நினைக்க)

சரணம்

கருணைவிழி யீராறும், கனல்விழி ஓராறும்
கனிவாய் ஓராறும் கனக குண்டலப்பணி
மருவிய செவிகள்பன் னிரண்டும் நாசி ஓராறும்
வாய்ந்தசண் முகங்களும் வடிவேல் முதலாக

வைத்த ஆயுதமும் புயங்களும்
மொய்த்த ஆபரணங்களும் சிவன்
முத்துதாள்களும் அன்புகொண்டிரு
பக்கமேவிய பெண்களும் தினம் (நினைக்க)

கொல்லா விரதமே குறியென்று கைக்கொண்டு
கோரமுடமென்னும் குணத்தின் வேரறக்கண்டு
நல்லாரொடுகூடி ஆறெழுத்தையும் விண்டு
ஞானயோகவுண்மை நாடிமெய்த் திருத்தொண்டு

நன்றெனத்தின முஞ்செய்தாணவ
பந்தமுற் றொழிகின்ற பேறருள்
என்றுமுத்தமிழின் சொன்மாலைவ
னைந்தளித்துயர் கந்தனுடைலை (நினைக்க)

சந்திரசேகர னுர்தருமைந்தனைச்
சங்கரி மடிமிசை தவழ்கின்ற கந்தனை
இந்திரன் மகளுக்கும் வள்ளிக்கும் சொந்தனை
இனிய திருப்புதழ் ஆயபிர பந்தனை

எண்ணிலாத மலைத்தலத்திடை
நண்ணி வாழொரு மெய்க்குருக்களை
விண்ணில்வானவ ருக்குவப்பருள்
புண்ணியாதிப னைக் கருத்திடை

நினைக்க நினைக்க அருளானந்தவாரிதி
நிறைந்து ததும்பிடுமே.

## 24 ஓரடிக்கீர்த்தனை

**இராகம் : சக்ரவாகம்** **பல்லவி** **தாளம் : ஆதி**

தெரிசனை செயலாமே—பழவினைத்
தியக்கமற்றுயலாமே.

**அநுபல்லவி**

அரியயன் தேடரி தாகிய பாதனை
அம்பல வாணனை உம்பர்கள் நாதனை
பெரியமலையை வில்லாக்கொள் நல்ஈசனைப்
பெற்றவர் நெஞ்சிற் பிறங்கு முல்லாசனை

பிற்படா துயர் மெய்ப்புகழ்ச்சிவனை—நறுந்தமிழ்
கற்ற நால்வர்கள் பற்றும் அற்புதனை—சடையினில்

பிறையும் நதியுடன் அரவும் இதழியும்
அறுகும் இலகுற முடிவில் நடமொரு

பேதைமுன் முயல்வானை அருட்கடல்
நீடு கண்ணுடையானை வளத்துயர்

வாகி மன்னுகு மாரபுரிப்பதி—மேவு சண்முகசாமி மடத்திடை
(தெரிசனை)

சரணம் (மடக்கு)

1 கனகசபையைப்போலே—இலங்கிய
கவுரியுடனொடு புலியும் அரவமும்
அமரர் முதலிய பிறரும் வழிபடு—கனகசபை

காலெடுத்தொரு தாளினைப் பொர
நேர் துடுக்கினன் மீது வைத்துள—கனகசபை

கருணையைப்பெரி துரைசெயத்துணி
வுறுபவர்க்குறு கதிஎனத்தகு

கனகசபையைப்போலே—இலங்கிய
காட்சிகள் மேன்மேலே.

2 அனகமெய்ப் பயன்தருமே—தினந்தினம்
அருகர் பிடகர்ள் முதலி யவர்மனம்
உலையமுடுகிடும் வலிமையென நிகழ்—அனக

ஆடல் பற்பல கோடியிப்புவி
மீதியற்றிடு மேன்மையுற் றெருளிர்—அனக

அடியராமவ ருடன் உலாவிய
பெருமை நீடிடு புதுமையாகிய

அனகமெய்ப் பயன்தருமே—தினந்தினம்
ஆனந்தக்கடல் வருமே—விடம்பொழி

பனகம் கட்டிய பெரும் பண்டி கொள்வானையும்
பன்னிரு திண்கை படைத்த வல்லோனையும்

சனகன் முதலாகிய தொண்டரெல்லோரையும்
சண்டி பிரீங்கிமுதற் சாற்றும் நல்லோரையும்

இனமெனத்தகு மேன்மை வந்திடுமே—விண்ணோர்களும்
இதுவியப்பெனும் ஆண்மை உந்திடுமே—பல்வாறு செல்

3 மனமதிற் களிவாரி மிஞ்சிடுமே—பொல்லாவினை
மறலிமுற்பகர் பாவம் அஞ்சிடுமே—இளமுலை

மங்கையர்க்குரு குங்கலக்கம் எ
னும்தியக்கம் அறும்பொருட்குவை
கொண்ட அற்பர்கள் முன்றிலிற் றின
முந்தவிப்புறும் வம்புமுற்றறும்

மழவிடைப்பரமா! நினைப்பவர் மனதினிற்குடி
யாயிருப்பவ!
வகுளமற் றுடையான் உடற்பொடி—படவிழித்த
வனே! எனச்சொலி

வண்குமாரபுரிதிபன்றனை—அன்பர்தாள் தருதூளுடன்புகழ்
இன்றசீர்திகழ் வீறுறுஞ்சிறு—தண்டபாணியனே எனும்படி

தெரிசனை செய்யலாமே—பழவினைத்
தியக்கமற்றுயலாமே.

## கீர்த்தனை 25

இராகம் : தன்யாசீ பல்லவி தாளம் : ஆதி

சேவித்த சம்பளம் முழுமையும் கொடடா
செவ்வேல் முருகோனே

அநுபல்லவி

பாவித்துக் கும்பிடும் அடியார் பாடிய
பாடலை நம்பியே பகலிரவாக நான் (சேவித்த)

சரணம்

முத்தமிழ் தோத்திரம் செய்ததற்காக—முனிவர்கள் பெறும்பேறும்
முன்னவன் நீ என்று தெளிந்ததற்காக—மூவர்கள் உறும்சீரும்
சித்தமுடுன்னையே நினைத்ததற்காகத்—
திருவடி சூடிடும் செல்வமும் தகுமென்றுன்
பத்தரும் பதினெட்டுச் சித்தரும் உனக்குள்ள
பாவையர் இருவரும் பகர்வார் பகர்வார் (சேவித்த)

திருமலைமீதிருந் தருண்டதற்காகச்—சித்திகளிருநாலும்
செழுமலர்ப்பூசனை செய்ததற்காகத்—தேவரும் புகழ்சீரும்
தருமமுந் தவமுமே சத்தியமாமென்று
சார்ந்ததற்காகவுன் றன்னூர் வாழ்க்கையும்
வருமென்று கருதிஎன் னேரம்உன் பேரொன்றே
மந்திரமெனக்கண்டு வாக்கும் மனமும்கொண்டு (சேவித்த)

வள்ளிதெய்வானை வந் தநுதினம்புணர—மகிழ்வுறும் குகவேளே
மயில்வாகனத்திற் பவனிவந்தருளும்—வளமையிற் பெரியோனே!
ஒள்ளியவாளுடன் வருமொருசூரன்றன்—
உடலிரு கூறுபட் டொழிந்திடப்பொருதோனே!
தெள்ளியமறையுடன் ஆகமந் துதித்திடும்
சிற்பரமாகிய சிவகுருநாதனே.

சேவித்த சம்பளம் முழுமையும் கொடடா
செவ்வேல் முருகோனே.

## கீர்த்தனை 26

இராகம்: தேவமனோகரி பல்லவி தாளம்: ஆதி

இன்னமும் விடியவில்லையே—இம்மாயை இருட்(டு)
இன்னமும் விடியவில்லையே

அநுபல்லவி

பன்னக சயனன்முதல் தேவரெல்லாம் பரவும்
பரமசற் குருநாதன் சரணத் தடிமை பட்டும் (இன்னமும்)

சரணம்

கோடி கோடியாய் மகா மந்திரங்கள் செபித்தும்
குலவுந் தமிழ்ப்பனுவல் பலவாகப் பாடியும்
தேடிய பொருளெல்லாம் தருமத்திற் செலவிட்டும்
தெய்வ மொன்றேஎனும் தெளிவுமுற்றேன் ஐயோ
(இன்னமும்)

ஆறுவகைச் சமயத் தெய்வமும் பேசியும்
அருந்தவமே துணையாமெனத் தேறியும்
நீறுடல் முழுமையும் பூசிக்கொண்டாடியும்
நினைத்து முயலும் வண்ணம் அனைத்தும் செய்திடும்படி

இன்னமும் விடியவில்லையே—இம்மாயை இருட்(டு)
இன்னமும் விடியவில்லையே.

## கீர்த்தனை 27

இராகம் : சங்கராபரணம் பல்லவி தாளம் : ரூபகம்

காப்பாற்றவேணும்—முருகா என்னைக்
காப்பாற்றவேணும் முருகா—முருகா முருகா என்னை

**அநுபல்லவி**

சாப்பாட்டிலும் உறக்கம் தனிலும் மின்னார்இரு
தனத்திலும் ஆவல்கொள் மனத்தனானாலும் நீ—காப்பாற்ற

**சரணம்**

வச்சிரம் ஏந்திய இந்திரனும், செழு
மலர்வந்த வேதனும் மாயவனும், திகழ்
முச்சிரச் சூலங்கொள் ஈசனும், மற்றோரும்
முண்டொருமித்தென்னை முடிக்கவென் றெதிர்த்தாலும்

முனைகொண்ட வேலும்—மற்றப்படையும்
சினமிஞ்சு கோழிக்—கொடியும்கொண்டு

பச்சிளங் கொங்கைகொள் வள்ளி தெய்வானையுன்
பக்கத்திலிருமின்னல் ஒத்து விளங்கிட
அச்சப்படாதே இதோவந்தேன் வந்தேன் என்(று)
அடிக்கடி சொல்லிஓர் நொடிக்குள் மயில்மேல்வந்து
(காப்பாற்ற)

பொன்னை, நிலத்தை, மின்னாரை, மெய்யாகிய
பொருளென நினைத்துள்ள மருள்கொண் டெள்ளளவேனும்
தன்னை நினைத்துப்பா ராததுமன்றிமெய்த்
தலைவனும் உன்னையும் சற்றும் மதியாமல்

தலந்தனில் வாழ்ந்து—நமன்விடுக்கும்
பலங்கொண்ட தூதர்—வந்துகொடுபோய்ப்

பின்னரரும் நரகிற் றள்ளி வருத்திச்செய்த
பெரும்பவந்தீர்ந்துபின் பிறக்கும்படிவிடுக்க
அன்னை வயிற்றிற்சென்று பத்துமாதமும் சொல்லற்(கு)
அரிய துன்பப்படுதற் குரியவரைச் சேராமல் (காப்பாற்ற)

செந்தமிழாற்கவி தினந்தினம் உன்றன்மேற்
செப்பும் திறனும், உன்னைத் தேடும் மதியும், நிதம்
வந்தனைசெயுமன்பர் மேலன்பும், உலகப் பொய்
வாழ்க்கையதனை உள்ள வாறு நினையறிவும்

வதைஎன்ற சொல்லைக்—கேட்டிடினும்உட்
பதை பதைக்கின்ற—இரக்கமும்

சிந்தனையினிலுன்றன் உருவமல்லால் ஒன்றும்
சேராத நன்மையும் திடசித்தமும் தவமும்
தந்தடியேனுக்கு முன்னுளினில்முருக
தாசனெனப்பேர் தந்த வாசகத்தினை முற்றும்

காப்பாற்றவேணும் முருகா! என்னைக்
காப்பாற்ற வேணும் முருகா.

## கீர்த்தனை 28

இராகம்: ஹரிகாம்போதி பல்லவி தாளம்: சாபு

தில்லைத்திருநகரிக் கனகசபையில் ஒரு
செல்வனைப் பணிவேனே (தில்லை)

### அநுபல்லவி

பல்லுத் தெரியச்சென்று புல்லரிடத்துநின்று
பாட்டுப்படித்துத்தளர் கேட்டைத்தவிர்த்துவளர் (தில்லை)

### சரணம்

செந்தமிழ் பொழியவும் அந்தகன் அழியவும்
சித்திகள் ஆடவும் சத்தியம் நீடவும்
மந்தர கிரியெனப் பந்தெனத் திகழ்தன
மகளிரை நீங்கவும் புகழருள் ஓங்கவும் (தில்லை)

மூவாயிரவரும் தேவருலகினரும்
முனிவரும் நாகரும் மனித ரனேகரும்
பாவ வினைகள் போகித் தீவிர நினைவாகிப்
பரமசிவமே என்று பரவுபேரொலிதுன்று (தில்லை)

தவசி ஒருவன் கொண்ட கவலையறிந்துவிண்ட
சத்தப்படி சிற்றுண்டிமெத்தக் கொடுத்தென் தொண்டில்

உவகைமிகக் கொண்டாடும் சிவனைமுத்தமிழ்பாடும்
உண்மையினர்க்கிசைந்த வண்மை பெருகும் இந்தத்

தில்லைத்திருநகரிக் கனகசபையில் ஒரு
செல்வனைப் பணிவேனே

## கீர்த்தனை 29

இராகம் : ஸிம்மேந்திரமத்திமம் பல்லவி தாளம் : ஆதி

பாறைக்கிணறுவெட்டச் சொல்லிவிட்டிப்போது
பதுங்கலாமோ சாமி (பாறை)

அநுபல்லவி

சோறைத்தண்ணீரென்றால் ஊற்றுச் சமீபமென்று
சொன்னசொல் பொய்யாமோ சுப்பிரமணியரே

சுத்தவீரதத்துவ ரொடுதுறவிகள்
சித்தமேயெனக் கருகிய திறல்பெறு (பாறை)

சரணம்

இன்னவூரிற் றெருழி லாளியைவருத் தென்றீர் !
ஏற்றுக்கொண்டேன் அவன் இயம்பிய வகைபொய்த்தும்
பின்னொரு தானமும் ஆகாதவ் விடத்திற்றுன்
பேருற் றிருக்குதென்றீர் ! நீருற்றொன்றையும் காணேம்

பித்தம் உம்முடைய தந்தைய தல்லவோ
பத்தர் தம்மனம் நொந்திடல் சரியோ
சித்தமென்ன முழு வம்பு செய்வதுவோ
மெத்த உண்மையொடு கும்பிடும் எனைநீர் (பாறை)

கண்டவர் கேட்டவர் அதிசயம் எனப்பேசக்
கைப்பொரு ளின்றியும் கடன்கொண்டு மனம்கூச
அண்டம் வெடித்ததுபோற் சுரங்கத் தொளிகிளம்ப
அறியாதபேர், பொருள் ஆண்மை எனவிளம்ப

அன்பின் மகிமை துலங்கிட வினைசூழ்
வம்பர்சிலரும் இகழ்ந்திட மலைபோ
லுங்கல் வரிசை குவிந்திட உனைநான்
நொந்து பெரிது புலம்பிட எனைஓர் (பாறை)

சத்திவை வேலனே சண்முக முருகோனே
சங்கரன் புதல்வோனே! தமிழ்முனிக் கருள்வோனே
பத்திசெய்வோர்மனப் படிமுடித் திடுவோனே
பரமசற் குருபர! சரவண பவனே என்

பால் உரைத்தசொல் அத்தனையும்பிழை
தான் எனப்பலர் செப்பிநகும்படி
ஏன்விடுத்தனை இப்பொழுதிங்குயர்
நீர்வரப்புரி! முத்தர்களுமபுகழ்

பாறைக்கிணறு வெட்டச் சொல்லிவிட்டிப்போது
பதுங்கலாமோ சாமி

## கீர்த்தனை 30

இராகம்: ஷண்முகப்பிரியா பல்லவி தாளம்: ஆதி

கனவி லாண்டபடி நனவில் ஆள்வதற்குக்
காலதா மதம் ஏன் ஐயா

அநுபல்லவி

அனவரதமும்திருத் தண்டும் வேலும் தாங்கி
அருட்பழனிபுரி அசலத்தில் அமர்ந்தோனே (கனவில்)

சரணம்

காரணத்தாற்பிறந் தாயெனச் சொன்னதும்
கைக்கிளி யென்றதும் கவிநயம் கொடுத்ததும்
மாரண மாகாமல் மலையில் உருண்ட அன்று
வாழ்வித்ததுவும் பெருந் தாழ்வாகி விடலாமோ (கனவில்)

சருவப் பிரசாதமும் தந்து திருவடித்
தாமரைக் கண்ணிலும் தலையிலும் சூட்டியே
அருவமும் உருவமும் ஆனநிலையும் சொல்லி
அமரரும் கண்டென்னை அதிசயித்திடப்பல (கனவில்)

என்னைப் பெண்ணுகின்ற தொருகலை யளித்தோனே
ஈசற்குத் தாரகம் இயற்றிய குருநாதா!
அன்பைத் துணைக்கொண்டு நம்பித் துதிக்குமென்னை
ஆளாக்கிக் கொள்ளாமல் அலக்கழித்திடப் போமோ

கனவி லாண்டபடி நனவில் ஆள்வதற்குக்
காலதா மதம் ஏன் ஐயா

## கீர்த்தனை 31

இராகம் : நீலாம்புரி பல்லவி தாளம் : ஆதி

மழைபெய்யப்புரிவாயே—தெய்வமே நல்ல
மழைபெய்யப்புரிவாயே

அநுபல்லவி

உழையணிந்திட்டகைச் சிவன் முதலாந் தெய்வம்
உள்ளவெல்லாமாகி ஒன்றுதல் நிசமானல் (மழை)

சரணம்

செந்தமிழ்ப் புலவோர்முன் செப்பிய படியெல்லாம்
செகதலத்தில் நடந்த சீர்த்திபொய்த் தொழியாமல்
இந்த நாளினும்சரச் சுவதி கடாட்சமுண்(டு)
இகபர மறிந்ததோர் ஈசனும் உண்டென்ன (மழை)

அரசன்செய் திடும்கொடு நீதியைக் குறியாதே
அகிலத்துள்ளார்செயும் அசத்தியம் மதியாதே
பரவுமன் பரைக்கற்பு மகளிரைப் பார் என்று
பாடி ஆமாத்தூரிற் பரன்முன் வைத்ததையெண்ணி (மழை)

பயிர் செய்துள்ளோர் தண்ணீர் இறைக்கின்ற ஓசையும்
பணக்காரர் நெற்காரர் பவிசும்உல் லாசமும்
செயிர்படும் ஆடுமா டாதிய உயிர்களின்
தியக்கமும் தீர்ந்திடத் திருவருட் பெருக்கத்தால் (மழை)

முன்னொருக்காற் சொன்னபதிகம் பலித்ததெண்ணி
முறைப்படி பின்னொன்றும் மொழிந்தவமதிப்புற்றேன்,
என்னொடின் னொருதொண்டன் சொன்னசொற் றள்ளாமல்
இதுசொன்னேன் இன்னமும் அவமானம் செய்யாதே(மழை)

*பன்னிரு சமயத்துப் பொருள்களு மாய்நின்ற
பரம்பொரு ளேமெய்ப் பராபர வத்துவே

---

*அகச்சமயம் ஆறு : சௌரம், சைவம், சாத்தேயம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம்.

புறச்சமயம் ஆறு : சமண், பௌத்தம், உலோகாயதம, தார்க்கீகம், மாயாவாதம், பூர்வமீமாஞ்சம.

அன்னியத் தோடனன்னிய மான பிரமமே
அருந்தமிழ்த் திருப்புகழ் அதன்தொனி போல்இன்றே

மழைபெய்யப்புரிவாயே—தெய்வமேநல்ல
மழைபெய்யப் புரிவாயே

## ஓரடிக்கீர்த்தனை 32

இராகம் : கானடா பல்லவி தாளம் : ஆதி

மலரணைமேல் வாடா—உயிர் போமுன்னே
மருவிச் சுகந் தாடா !

### அநுபல்லவி

திலக நுதலில் வேர்வை சிந்தஇதழ் துடிப்பச்
செப்புமொழி குழறத் தேகம்பதற, அணி
கலையும் வளையுந்தானே கழல, வலியவந்த
கன்னியரைச் சேராமல் கைவிடுவாருமுண்டோ

கங்கை பெற்றிடு சுந்தரக் குகனே! செந்தூர்வளர்
கந்தவெற்பினில் நின்ற முத்தையனே ! செந்தேனெனக்

கவிகள் பாடிடும் நலமுளார்கள் இதயமேவிடு குமரனேஉயர்
கற்பகப்பைந்தருக்காவல—னைச் சசிப்பெண் தனத்தோடணை
பொற்புறக் கண்டுமற்சூரனை—வெட்டிநிற்குந் திறற்சேவக.

கனககர் வளர் பிடியும் வன்குற
மகளும் அணைதரு புய!இ ரங்கி என்

மலரணைமேல் வாடா—உயிர் போமுன்னே
மருவிச்சுகந்தாடா !

பல்லவி (உள்மடக்கு)

கொங்கைக்கு டங்கள் விம்முதே—பெருத்ததான

1 குவடதைப்பொற் கிரியினைச்செப்
பினை எதிர்த்துப் பொரும்இரட்டைக் (கொங்கை)

2 குஞ்சரத்தின் தந்தமொக்கும் சந்தனச்செங் குமத்தண்
(கொங்கை)

3 குழம்பைப், படர் சுணங்கை,ப் பணி யுடன்கச்சினை
உறும்பொற்புறு

கொங்கைக் குடங்கள் விம்முதே—பெருத்ததான
கூர்வேல் விழிகம்முதே—என்ளேடொத்த
மங்கையர்க்கிகழ்வாச்சே—தினந்தினம்

1 மதகலைப்படி உனையணைந்திடும்
இனிய சொப்பனமது கொளக்கொள (மங்கை)
2 மயிலில்நீவரு பவனியேகினை, கொடிய மோகன லகரிமீறிட
(மங்கை)
3 மலரணியை, அணி களபமதை, அமு தினை, உறவினரை
அனையஇகழவும்

மங்கையர்க் கிகழ்வாச்சே – தினந்தினம்
மதிசுடப் பெருமூச்சே — மன்மதப்பாவி.

செங்கைச் சலிப்பில்லாமல் தெறிக்கும் மலர் அப்பாலும்
தென்ற லாலும், குயிற் சின்னத் தாலும், வீசும்
துங்கக் கடல்முரசத் தாலும் அன் றிலாலும்
துன்பப் படுகின்றேன்பொய்ச் சொல்லல்ல மெய்தாண்டா !

தங்கக்கட் டிலின்மேலே சரிந்திலைச் சுருள்மாறிச்
சரசரஞ் சிதவார்த்தை தழுதழுத் திடக்கூறி
மங்களாகர மாமயல் வெறிமீறி
மனத்துள்இரு வருக்கும் மகிழ்ச்சிமி கவும்மீறி

மயிர்சிலிர்த்திட முலைமுகத்தினையே—நெருடிப்பின்
வலிகொளச்சில குறிகள்வைத்துயர்தா—னடஞ்செய்து
கையின்விரற்கொடு செயும்நயத்தொழிலா—கியவுயர்
கரிகரத்தினை இனிதியற்றிடவே—ஈரஞ்சற்றே

கசியவந்தென திருகுறங்கும்உ
னதுபெருந் தொடை மிசைகிடந்தசை
வுறஅசைந்திகழ் பருகிஅன்பொடு
குணமிசைந்திட அணிசிலம்புகள்

கத்திடக்கண் சிவந்தேகடை
சொக்கிடக்கண் டுகொண்டாடி,எ
டுத்தணைத்தங் கசன்காணவும்
வெட்கிஇக்கங் கெறிந்தோட,ந
கைத்துமுறைமுறை முத்தியுடலம்,ந
முக்கிமதசலம் ஒத்துவர ஒரு

கனவிலும்இரு வருமருதென
வரிமைதருமுயர் கலவியேசெய
அமலபரசிவன் மகிழஓர்மொழி
பகரும் இணையறு குருபரா ! எழில்

மலரணை மேல் வாடா—உயிர்போம்முன்னே
மருவிச் சுகந்தாடா (மலரணை)

## 33 நாமாவளி

மாயாமாளவ கௌளைச் சுரங்கள். தாளம் : ஆதி

அரிகரி கேசவ நாராயணா-அருட்டிரு வாய்மொழிப்பாராயணா
அறிந்தவர்க் கருள்செயும் ரகுராமா-அகண்ட பிரமானந்தப் பரந்தாமா !
சங்குசக்கரங்கையிற்றரித்தோனே—தானவப்படையைச்சங் கரித்தோனே
சதுர்முகப்பிரமனைத் தந்தோனே—தந்தியொன்றழைக்குமுன் வந்தோனே.

இரணியன் மார்பினைக் கீன்றோனே—இக்குவில் மாரனையீன்றோனே
ஆழ்வார்பதின்மரும் அணிபாதா—அருச்சுனன் அறியமுன் அருள்போதா
பாண்டவர் தூதெனச் சென்றோனே—பழமறைமுடிவினில் நின்றோனே
செந்தாமரைமலர்க்கண்ணனே—திருட்டு நெஞ்சகத்தாரை நண்ணனே

அரகர சிவசிவ மகதேவா! அருள்விளையாடல்கள் செயவாவா
நால்வருக்கருள்செயும் நல்லானே—நமன்முதலோர்க்கொரு பொல்லானே!
பஞ்சாட்சரப்பொருள் ஆனோனே—பரவைதன் மனைக்கும் போனோனே
வேலாயுதம் புனை மெய்யோனே—காலாயுதந்திகழ் கையோனே!

நம்பியபேர்க்கருள் பெய்வானே-நாடகம் மலைதொறும் செய்வானே
சரவணப்பொய்கையில்வரும் நாதா !—
தகப்பன்முன் வணங்கிடும் இருபாதா.

## 34 மங்களம்—கீர்த்தனை.

இராகம் : ஸ்ரீராகம் பல்லவி தாளம் : ஆதி

மங்களம் மங்களமே—தினந்தினம்
மங்களம் மங்களமே......

அநுபல்லவி

செங்கம லத்தடம் பொய்கைகள் சூழும்
திருப்புகலூரிற் சிவபெரு மானுக்கும்
கங்கணக் கைக்குயி லேயெனத் தோற்ருெரு
கன்னிகையாகிய கருந்தார் குழலிக்கும் (மங்களம்)

சரணம்

நம்பின பேர்க்கநு கூலங்கள் செய்திடும்
ஞானவி நாயக னும்முதல் மைந்தற்கும்,
அம்பிகை யாம்தனி வேற்படை ஏந்திக்கொண்
டாடும் மயூரத் தமர்ந்திடும் கந்தற்கும்,
தும்பியும், நீற்றறை யுங்கட லுஞ்செயும்
துன்பங் கடந்துமெய்த் தொண்டுசெய் அப்பற்கும்,
வெம்பிடும் தீமிடி தீரப்பொற் செங்கல்
விரைந்துகொண டான்முதல் மெய்யர்தம் குப்பற்கும்
(மங்களம்)

தண்டமி ழாற்கொடும் சாரணர் தம்மைத்
தடிந்துவப் பெய்திய சம்பந்த மூர்த்திக்கும்,
மண்டலத் தோர்அறி யாமுதல் முத்தியில்
வாழ்கின்ற மாணிக்க வாசகர் கீர்த்திக்கும்,
அண்டரும் மாதவத் தோர்களும் நம்பி
அநுதினம் சொல்லும்நல் அட்சரம் ஐந்துக்கும்
தொண்டர்தம் பாடற் சுவைமிக நாடொறும்
துய்க்கும் செவிகளில் தூக்கிய நந்துக்கும் (மங்களம்)

அல்லல் அனைத்தும் அறுக்கும்வெண் ணீற்றுக்கும்
அத்தன்கண் ஈன்றிட்ட தாம்அக்க மாலைக்கும்
புல்லருந் தும்பசு வின்றிரள் யாவிற்கும்
பூம்புக லூர்வளர் புன்னையின் சோலைக்கும்
கொல்லத் துணிவது வேள்வியி லாயினும்
கொடுமையென் றேதுநர் கும்பிடும் கோவிற்கும்
நல்ல தமிழ்க்கவி யாற்சிவ லீலையை
நாடொறும் பாடி நவிலும்எந் நாவிற்கும்

மங்களம் மங்களமே—தினந்தினம்
மங்களம் மங்களமே.

தெய்வமே துணை.

முற்றிற்று

---

ஹநுமான் அச்சியந்திரசாலை, விழுப்புரம

Rs 2 - 2